ஆகஸ்ட் 2013 August | இதழ் 271 ISSUE

# தமிழர் தகவல்
# TAMILS' INFORMATION



பிறம்ரன் விழாவில்

ஈழம் சாவடி



23 வது ஆண்டில் 3rd Year

Growing with the Community ESTD-1991

ஆசிரியரிடமிருந்து — From the Editor

## பொது வேட்பாளர்

ஐந்து கட்சிகளைக் கொண்ட தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள் சில வாரங்களாக இருந்துவந்த ஜனநாயக ரீதியான இழுபறி இறுதியில் ஒருமனதான முடிவுக்கு வந்துள்ளது.

முடிவு சரியா பிழையா என்பதற்கு அப்பால், கூட்டமைப்பு பிளவுபட வேண்டுமென எதிர்பார்த்து பேசிக்கொண்டும் எழுதிக்கொண்டும் பிழைப்பு நடத்தியவர்களுக்கு ஏமாற்றம் அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்ப் புத்திஜீவிகள்-குடிசார் பிரமுகர்கள்-தமிழீழத்துக்கு வெளியே வாழும் தமிழர்கள் என்று பலரையும் அணைக்கக்கூடியதான ஒருவரை வடமாகாண சபைத் தலைமை வேட்பாளராக நியமிக்க வேண்டியது காலத்தின் தேவையாக அமைந்ததை அவதானிக்க முடிகின்றது.

தமிழர் அரசியலில் நேரடியாக ஒருபோதும் பங்குபற்றியிராத திரு. சி. வி. விக்னேஸ்வரன் நீதித்துறையில் உயர் பதவிகளை வகித்தவர். நேர்மை மிகுந்த துணிச்சல்காரர் எனப் பெயர் பெற்றவர். அரசாங்கத்துக்குப் பயந்து கருத்துகளை மாற்றாது வெளிப்படுத்தி வந்தவர்.

இலங்கை கம்பன் கழகம் ஊடாகவே பொதுவாழ்வில் இவரை முதலில் மக்கள் அறிந்து கொண்டனர். நீதிச் சேவையிலிருந்து ஓய்வுபெற்ற வேளை நிகழ்த்திய பிரியாவிடை உரை, தமிழரின் நியாயமான அரசியல் கோரிக்கையை மேலும் வலுப்படுத்தியது.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவைப் பதவி நீக்க மகிந்த அரசு நடவடிக்கை எடுத்த வேளையில், இவர் அது தொடர்பாக எடுத்த நிலைப்பாடும் வெளிப்படுத்திய கருத்தும் இலங்கை அரசுக்கு நெருக்கடி ஏற்படுத்தியவை.

மகிந்த ராஜபக்ச நியமித்த புதிய நாடாளுமன்ற தெரிவுக் குழுவை கூட்டமைப்பினர் புறக்கணித்ததை இவர் பாராட்டியபோது சொன்ன காரணங்கள் நீதியான நியாயமானவை.

ஆனாலும், இவருக்குத் தமிழரின் கள அரசியலில் அனுபவமில்லை; இவரது மகன் அமைச்சர் வாசுதேவ நாணயக்கரவின் மகளைத் திருமணம் புரிந்தவர்; இவர் கொழும்பின் மேட்டுக்குடி வாழ்க்கையில் நனைந்தவர் என்ற பல காரணங்கள் இவருக்குப் பாதகமாக சொல்லப்படுகின்றன.

அதிகாரமில்லாத - இருக்கின்ற அதிகாரங்களும் பறிக்கப்படுகின்ற மாகாண சபை நிர்வாகத்துக்குச் சட்ட ரீதியாக முகம் கொடுக்கக் கூடிய அனுபவமும் துணிச்சலும் விக்னேஸ்வரனுக்கு நிரம்பவே உண்டு என்று கூறப்படுவது இவருக்குச் சாதகமான புள்ளிகள்.

அறிவிக்கப்பட்டவாறு தேர்தல் நேர்மையாக நடைபெறுமானால், பொதுவேட்பாளர் தலைமையில் கூட்டமைப்பு வடமாகாண சபையைக் கைப்பற்ற வேண்டும் - உலக அரங்கில் தமிழரின் அரசியல் போருக்குப் பலம் சேர்ப்பதற்காக!

அதேசமயம், முதலமைச்சரின் கடிவாளம் தமிழ்க் குடிசார் புத்திஜீவிகள் குழுவொன்றின் நேரடிக் கண்காணிப்பிலிருக்க வேண்டும் என்பது கட்டாய அவசியம்.

திரு எஸ். திருச்செல்வம்

தமிழர் தகவல் TAMILS' INFORMATION

ISSN 1206-0585

ஆரம்பம்
பெப்ரவரி 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

தொலைபேசி
416 920 9250
தொலைநகல்
416 921 6576

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம், ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
ரஞ்சி திரு

உதவி ஆசிரியர் &
தயாரிப்பு முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்கள்
குயின்ரஸ் துரைசிங்கம்
அனோஜினி குமாரதாசன்

பொது முகாமையாளர்
எஸ். ரி. சிங்கம்

விநியோக முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

பொதுமக்கள் தொடர்பு
இ. சிவலிங்கம்
எஸ். திருமுருகா
ப. சிவசுப்பிரமணியம்
பொன். சிவகுமாரன்
என். குமாரதாஸன்

தொழில்நுட்ப உதவி
ஹரன் கிறாஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்

தமிழர் தகவல் TAMILS' INFORMATION

ISSN 1206-0585

Established
February 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

Tel: 416 920 9250
Fax: 416 921 6576

email
tamilsinfo@sympatico.ca

Produced by
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto &
Thamil Information Research Unit (THIRU)

Published by
Ahilan Associates

Editor in chief
Thiru S. Thiruchelvam

Associate Editor
Ranji Thiru

Assistant Editor and
Production Manager
Sasi Pathmanathan

Assistant Editors
Quintus Thuraisingam
Anojini Kumaradasan

General Manager
S.T. Singam

Circulation Manager
R. R. Rajkumar

Public Relation
R. Sivalingam
S. Thirumuruga
P. Sivasubramaniam
Pon. Sivakumaran
N. Kumaradasan

Technical Support
Haran Graph

Monthly
5000 Copies

Annual
6000 Copies



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'சப்வே' கிழக்கு வரை ரயில் சேவை விஸ்தரிப்பு!

ஸ்காபரோ ஷெப்பர்ட் வீதி வழியாக ஸ்காபரோ கிழக்கு வரை சப்வே சேவையை விஸ்தரிப்பது தொடர்பான வாதப் பிரதிவாதம் முடிவுக்கு வந்துள்ளது.

7.6 கிலோ மீட்டர் தூரத்துக்கு மூன்று புதிய ரயில் தரிப்பு நிலையங்களுடன் 'சப்வே' சேவையை நீடிக்க 2.3 பில்லியன் டாலர் தேவைப்படும். ஆனால் ஏழு தரிப்பு நிலையங்களுடன் எல். ஆர். ரி ரயில் சேவையை நீடிக்க 1.8 பில்லியன் டாலர் தேவைப்படும்.

கென்னடி சப்வேயிலிருந்து மக்கொவன் வரை செல்லும் எல். ஆர். ரி எனப்படும் நிலத்துக்கு மேலால் செல்லும் சிறிய ரயில் பெட்டிகளைக் கொண்ட சேவையை ஸ்காபரோ கிழக்கு வரை நீடிக்க ஒன்ராறியோ மாநில அரசாங்கம் விரும்புகின்றது.

ஆனால், நிலத்துக் கீழான தொடருந்து 'சப்வே' சேவையை நீடிக்க ரொறன்ரோ நகர முதல்வர் றொப் போர்ட் ஆதரவு பெற்றுள்ளார். சப்வே சேவையை நீடிப்பதானால், ரொறன்ரோ நகர மக்களின் வரி அதிகரிக்கப்படலாமென அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

## 'சன்' ஊடக நிறுவனத்தின் 11 பத்திரிகைகளுக்கு மூடுவிழா; 360 ஊழியர் வேலையிழப்பு!

கனடாவின் மூத்த ஊடகங்களில் ஒன்றான 'சன்' ஊடக நிறுவனம் தனது பதினொரு வெளியீடுகளை உடனடியாக நிறுத்துவதென்று முடிவெடுத்துள்ளது. இதனால் 360 ஊழியர்கள் வேலையிழக்கின்றனர். நிறுவனம் தொடர்ந்து சந்தித்து வரும் பொருளாதார நெருக்கடியே இதற்கு முக்கிய காரணமாகும்.

விற்பனை செய்யப்படும் எட்டுப் பத்திரிகைகளும், இலவசமான மூன்று பத்திரிகைகளுமே நிறுத்தப்படுகின்றன. ஆனாலும் ரொறன்ரோ மற்றும் மொன்றியல் நகரங்களிலிருந்து வெளியிடப்படும் '24 hours' இலவச பத்திரிகை, திங்கள் முதல் வெள்ளி ஆகிய ஐந்து நாட்களிலும் வெளிவருமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# புதிய குடிவரவு அமைச்சர் நியமனம் குடிவரவுக் கொள்கைளை மாற்றுமா?

### குடிவரவாளர் சமூகங்கள் ஆவலுடன் எதிர்பார்ப்பு

## A new face might bring forward a new attitude

The appointment of GTA area MP Chris Alexander from Ajax-Pickering to Minister of Citizenship and Immigration is being lauded by many who believe that it is time the Conservatives step back and assess the sweeping changes made to the Immigration and Refugee system.

கடந்த மாதம் கனடிய அமைச்சரவையில் ஏற்பட்ட பெருமாற்றம் காரணமாக, ரொறன்ரோ பெரும்பாகத்தைச் சேர்ந்த ஏஜக்ஸ்-பிக்கரிங் தொகுதியின் உறுப்பினரான கிரிஸ் அலக்ஸாந்தர் குடிவரவு மற்றும் பிரஜாவுரிமைகள் அமைச்சராக நியமனமாகியுள்ளார். கனடிய வெளிவிவகார சேவையில் பதினெட்டு வருடங்கள் ஓர் இராஜதந்திரியாகப் பணியாற்றிய அனுபவஸ்தர் இவர்.

"புதிய அமைச்சர் அலக்ஸாந்தர் குடிவரவு மற்றும் அகதிகளுக்கு நன்மையளிக்கக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்வார்" என்று பல்வேறு சமூக அமைப்புகளும், குடிவரவு-அகதிகள் துறைசார் சட்டவாதிகளும் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

2008ஆம் ஆண்டு முதல் ஹாப்பர் அரசாங்கத்தில் குடிவரவு-பிரஜாவுரிமைகள் அமைச்சராகவிருந்த ஜேசன் கெனி, பல கெடுபிடிச் சட்டங்களை நடைமுறைப்படுத்தி வந்ததால் பெருந்தொகையான மக்கள் தாங்கொணாப் பிரச்சனைகளை எதிர்கொண்டு வந்ததை இவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

Throughout the tenture as minister, Kenney has been widely critisized. Toronto's immigration minister believes Kenney will be viewed as perhaps one of Canada's most controversial ministers said Waldman. He is hopeful, "a new face might bring forward a new attitude".


"குடிவரவுத்துறையில் புதிய மாற்றங்களைக் கொண்டுவர வேண்டியது அவசியமாகியுள்ளது" என்று கருத்து வெளியிட்டுள்ளார் குடிவரவாளர்களுக்குள் சேவை புரியும் அமைப்புகளின் ஒன்ராறியோ கவின்சிலின் தலைவர் டெபி டக்ளஸ்.

கனடாவுக்கு வருடாந்தம் வரும் புதிய குடிவரவாளர்களின் வரவேற்புப் பிரதேசமாகவும் சுமார் ஐம்பது வீதமானவர்கள் விரும்பிக் குடியேறும் பிரதேசமாகவும் ரொறன்ரோ பெரும்பாகம் விளங்குகின்றது. அந்த வகையில் இந்த மக்களின் மனோநிலையைத் தெரிந்து வைத்துள்ள இந்தப் பிரதேசத்தின் எம். பி ஒருவர் புதிய அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளதைப் பலரும் வரவேற்றுள்ளனர்.

"அடுத்த பொதுத் தேர்தலில் சிறுபான்மையின மக்களின் வாக்குகளை இலக்கு வைத்தே அலக்ஸாந்தரைப் புதிய குடிவரவு அமைச்சராக ஸ்டீபன் ஹாப்பர் நியமித்துள்ளார்" என்ற கருத்தும் சில மூலைகளிலிருந்து வந்துள்ளது. "செய்ய வேண்டிய அத்தனை வேலைகளையும் கெனி முடித்த பின்னர் புதிய அமைச்சர் அப்பதவிக்கு வந்துள்ளார். புதியவரால் அவைகளை மாற்ற முடியுமா" என்ற கேள்வியைச் சீன சமூகத்தைச் சேர்ந்த சட்டத்துறையினர் எழுப்பியுள்ளனர்.

2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கைத் தமிழ் அகதிகள் இரண்டு கப்பல்களில் அகதிகளாக வன்கூவர் வந்த பின்னரே பல கெடுபிடிச் சட்டங்களை ஜேசன் கெனி கொண்டு வந்தார் என்பதை மறக்க முடியாது.

கனடிய அரசின் அதிகாரபூர்வ குழுவில் இரண்டாண்டுக்கு முன்னர் இலங்கைக்குச் சென்று திரும்பிய பின்னர், இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களைக் காட்டமாக விமர்சித்தவர் கிரிஸ் அலக்சாந்தர் என்பது குறிப்பிடத்தக்கது.●



செல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

கோடை விடுமுறை ஆரம்பமாகி விட்டது. நீச்சல் தடாகங்களிலும், வாவிகள் ஆறுகளிலும் குளிக்கச் செல்பவர்களுக்குப் பொதுவான எச்சரிக்கை காவற்துறையினரால் விடுக்கப்பட்டுள்ளது. வருடாந்தம் நீச்சல் தடாகங்களில் சிறார்கள் பலர் உயிரிழப்பது வழக்கம் இதனால் தமது பிள்ளைகளையிட்டு பெற்றார் கவனமாக இருக்க வேண்டுமென்றும், வளர்ந்தவர்கள் மதுபோதையில் நீந்தச் செல்லக்கூடாதென்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். கடந்த மாதம் நீச்சல் தடாகத்தில் இரு சிறுவர் உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது.

குழந்தைகள் பெறுவதைத் தாமதிக்கும் தாய்மார் தொகை மீண்டும் கனடாவில் அதிகரித்துச் செல்வதாக புள்ளிவிபரமொன்று காட்டுகின்றது 2011ம் ஆண்டில் 20 வயதுக்கும் 24 வயதுக்குமிடைப்பட்ட பெண்கள் பெற்ற குழந்தைகளைவிட, 35 வயதுக்கும் 39 வயதுக்குமிடைப்பட்டவர்கள் பெற்ற பிள்ளைகள் தொகையே அதிகமாகும். குழந்தைகளைப் பெறுவதைத் தாய்மார் தாமதிப்பது அவர்களுக்கு மட்டுமன்றி குழந்தைகளின் ஆரோக்கியத்துக்கும் நல்லதல்ல என மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர்.

Pixels for Pistols என்ற பெயரில் ரொறன்ரோ பொலிஸார் அறிமுகப்படுத்திய துப்பாக்கிகளைச் சேகரிக்கும் திட்டம் நல்ல பயனை அளித்துள்ளது. மீளளிக்கப்படும் ஒவ்வொரு துப்பாக்கிக்கும் ஒரு கமரா வழங்குவதே இத்திட்டம். கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் ஐநூறு வரையான துப்பாக்கிகளும் 200 வரையான சுற்று வெடி பொருட்களும் கமராவுக்காகக் கையளிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்று அபாயகரமான ஏ-15 வகைத் தானியங்கித் துப்பாக்கியாகும்.

கணினிகளின் விற்பனை தொடர்ச்சியாகக் குறைந்து வருவது அவதானிக்கப்பட்டுள்ளது. ஐபாட் போன்ற பொருட்களின் பாவனை அதிகரித்து வருவதே இதற்குக் காரணமென்று கூறப்படுகின்றது. இந்த வருடத்தின் முதலாம் காலாண்டில் 76 மில்லியன் கணினிகள் சந்தைக்கு விற்பனைக்கு விடப்பட்டன. ஆனால் இவற்றின் விற்பனை முன்னைய இதே காலப்பகுதியைவிட 10.9 சதவீதத்தினால் குறைந்துள்ளது. கடந்த ஐந்து காலாண்டுகளாக கணினி விற்பனை படிப்படியாகக் குறைந்து வருகின்றது.

ஒட்டாவாவில் அமைந்துள்ள கனடிய நாடாளுமன்றத்தின் உட்புறத் தோற்றங்களையும் வடிவமைப்புகளையும் கூகிள் இணையத்தளம் தனது பதிப்பில் இணைத்துள்ளது. இந்த வருடக் கனடாத் தினத்தன்று (ஜுலை 1) இது வெளியிடப்பட்டது. இந்த வருட ஏப்ரல் மாதத்தில் இவற்றை ஒளிப்படம் எடுக்கும் வேலைகளைக் கூகிள் ஆரம்பித்தது. தற்போது பொதுமக்கள் கூகிள் தளத்துக்குச் சென்று விருப்பமான பகுதிகளைப் பார்வையிடலாம். இது மாணவர்களுக்குப் பெரிதும் உதவக்கூடியது.

2004-2006 ஆண்டுப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு கணினி மென்பொருள் மற்றும் வழிகாட்டிக் கருவிகள் போன்றவற்றைக் கொள்முதல் செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் கனடியப் பிரஜையான சுரேஷ் சிறீஸ்கந்தராஜா (வாட்டர்லு சுரேஷ்), நியுயோர்க் நீதிமன்றத்தில் குற்றத்தை ஏற்றுக்கொண்டார். கடந்த வருடம் டிசம்பரில் இவர் வழக்கு விசாரணைக்காக அங்கு நாடுகடத்தப்பட்டிருந்தார். இவருக்கான தண்டனை இன்னமும் நீதிமன்றினால் அறிவிக்கப்படவில்லை.

## மூன்று மணித்தியால மழை ரொறன்ரோ பெரும்பாகத்தை வெள்ளத்தில் மூழ்கடித்தது!

கடந்த மாதம் 8ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் திடீரென இடிமுழக்கத்துடன் பொழிய ஆரம்பித்த கடும்மழை, ரொறன்ரோ பெரும்பாகத்தை ஒரு கலக்குக் கலக்கியது. 401 நெடுஞ்சாலை, லேக்ஷோர் வீதி, டொன்வலி பார்க் வீதி போன்ற பிரதான வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியதுடன் பல வாகனங்களையும் வெள்ளத்துள் ஆழ்த்தின. பல பிரதான வீதிகளின் பஸ், ரயில் சேவைகள் இடைநிறுத்தப்பட்டன. GO ரயிலொன்று வெள்ளத்துள் அகப்பட்டு நகர முடியாது போனதால், அதன் பயணிகள் படகுகள் மூலம் காப்பாற்றப்பட்டனர். மார்க்கம், றிச்மன்ட்ஹில் உட்பட்ட சில நகரங்களில் மின்தடை ஏற்பட்டதால் அவை பல மணி நேரங்களில் மூழ்கின. நூற்றுக்கணக்கானவர்களின் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்ததால் அவர்கள் அவசரமாக வீடுகளைவிட்டு வெளியேற நேர்ந்தது. ரொறன்ரோ நகரசபை பல லட்சம் டாலர்களைச் செலவிட்டு துரித கதியில் நகரை மீண்டும் வழமைக்குக் கொண்டு வந்தது. இப்படியான ஒரு மழை இரண்டு மூன்று தினங்களுக்கு இங்கு பெய்தால் நிலைமை என்னாகும் என்பதே பலரதும் கேள்வி.

## லான்ட்ஸ்ரவுண் தமிழர் கூட்டுறவு இல்ல வெள்ளி விழா

ரொறன்ரோ லான்ட்ஸ்ரவுணில் அமைந்துள்ள தமிழர் கூட்டுறவு இல்லத் தொடர்மாடியின் 25வது ஆண்டு 'வெள்ளி விழா' இந்த வருடத்தில் நடைபெறவுள்ளது. இனை முன்னிட்டு சிறப்பு மலரொன்றும் தயாரிக்கப்படுகின்றது. சேக்கம் அமைப்பின் முயற்சியால் ஒன்ராறியோ மாகாண அரசின் நிதியுதவியில் கூட்டுறவு குடியிருப்பாக இக்கட்டிடம் அமைக்கப்பட்டது.

## உலகில் நன்மதிப்புள்ள முதல் நாடு கனடா

உலகின் நன்மதிப்புள்ள முதலாவது நாடாகக் கனடா தெரிவு செய்யப்பட்டுள்ளது. 'G8' நாடுகளைச் சேர்ந்த 27,000 மக்கள் மொத்தம் ஐம்பது நாடுகள் மீது வழங்கிய வாக்குகளின் அடிப்படையில் கனடா முதலாவதாகத் தெரிவாகியுள்ளது. ஆற்றல்மிக்க அரசாங்கம், கவர்ச்சியான சுற்றுச்சூழல், பொருளாதார முன்னேற்றம், மக்களின் நம்பிக்கை, பொதுவான மதிப்பு உட்பட்ட பதினாறு கேள்விகளுக்கு இவர்கள் வாக்களித்திருந்தனர். முதலாவதாக வந்த கனடா நூறுக்கு 76.6 மதிப்பீட்டைப் பெற்றது. சுவீடன், ஆஸ்திரேலியா, நோர்வே ஆகிய நாடுகள் முறையே அடுத்த மூன்று இடங்களையும் பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடிய அமைச்சரவையில் பெருமாற்றம் எட்டு புது முகங்கள், நால்வர் பெண்கள்

## குடிவரவு பிராஜாவுரிமை அமைச்சராக கிறிஸ் அலெக்ஸாந்தர்
## ஜேசன் கெனிக்கு புதிய வேலைவாய்ப்பு & சமூக அபிவிருத்தி





# Harper cabinet shuffle: 8 new ministers - Four Women

## Chris Alexander new Minister of Immigration & Citizenship
## Jason Kenney moved to New Employment & Social development

Prime Minister Stephen Harper shuffled his cabinet on July 15th, bringing in eight new faces, including four women, and moving other key ministers to new jobs.

Manitoba's Shelly Glover was among the biggest winners — jumping from the backbench to minister of heritage, replacing James Moore who was moved to industry to replace Quebec's Christian Paradis.

Ontario MP Kellie Leitch was also given a huge promotion to become minister of labour, as was Toronto-area MP Chris Alexander who was given the citizenship portfolio, replacing Jason Kenney who moved to human resources.

Alberta's Michelle Rempel was named minister of western of economic diversification while Kevin Sorenson was tagged to replace Ted Menzies as minister of state for finance.

Manitoba MP Candice Bergen's efforts to kill the long-gun registry earned her a junior portfolio as minister of state for social development.
Key ministers, including Finance Minister Jim Flaherty, Foreign Affairs Minister John Baird, International Trade Minister Ed Fast, Agriculture Minister Gerry Ritz and Treasury Board President Tony Clement stayed put.

Rona Ambrose switches from the public works portfolio to health, Denis Lebel gives up leadership of the transport file to become regional minister for Quebec, and Steve Blaney replaces the retired Vic Toews as public safety minister.

Diane Finley moved from human resources to public works, Leona Aglukkaq from health to environment, Lisa Raitt from labour to transport, and Rob Nicholson from justice to defence, replacing Peter MacKay who becomes justice minister.
Ottawa MP Pierre Poilievre was promoted to minister of state for democratic reform.

New Brunswick's Rob Moore becomes minister of state responsible for the Atlantic Canada Opportunities Agency. Saskatchewan's Lynne Yelich becomes junior foreign affairs minister, replacing Diane Ablonczy.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டாக்டர் எம். கே. முருகானந்தன்

# கொங்கை இழந்த திரை மங்கையாள்...

"ஈர்க்கிடை புகா இளமுலை மாதர் என்றால் ஈர்க்கு போன்ற சிறுகுச்சி கூட அவளது மார்புகளுக்கிடையே புகாத வண்ணம் பருத்து மதத்த மார்பகங்களை உடைய உமாதேவியார்.."
வித்துவானான எமது ஆசிரியர் இரசனையோடு விளக்கிக் கொண்டிருந்தபோது அவன் சடீரென தூ என அசூயையோடு துப்பினான்.

ஒரு கணம் திகைத்துவிட்டோம். விடயம் புரிய கொல்லெனச் சிரித்தோம். பனம் பழம் விழுங்காலம். ஆவென வாய் திறந்து இரசனையோடு கேட்டுக் கொண்டிருந்தபோது அவனது வாயில் இலையான் புகுந்துவிட்டது.

எங்களுடன் சேர்ந்து ஆசிரியரும் சிரித்தார். அந்தப் பதின்ம வயதுகளிலே பெண்களின் மார்பகங்கள் பற்றிய கற்பனையும் இரசனையும் கலந்த படிமம் எங்கள் மனதில் விழுந்துவிட்டது. எங்களைச் சொல்லி என்ன? மாணிக்கவாசகரே இறைவியின் அங்கங்களில் கிறங்கியிருக்கிறாரே எனச் சமாதானம் கொள்ளலாம்.

அவ்வாறு இருக்கையில் ரதியென அழகான மார்பகங்களையுடைய பெண்மணிக்கு தனது உறுப்பு பற்றி எந்தளவு பெருமை இருந்திருக்கும்.

மரபணுப் பரிசோதனைகளும் மார்பு சீரமைப்பு சிகிச்சைகளும் சாதாரணர்களுக்கு சாத்தியமா?
'எனது மார்பகங்கள்தான் எனது மிகப் பெரிய அம்சம் ..' அண்மையில் இங்கிலாந்தில் செய்யப்பட்ட ஆய்வு ஒன்றில் 5 பெண்களில் ஒருவர் இவ்வாறு பெருமையோடு கூறியிருக்கிறார்களாம். இங்கிலாந்தின் பிரபல பத்திரிகையான The Sun தனது மே 9ம் திகதிக் கட்டுரையில் இக்கருத்தை வெளியிட்டிருந்தது.
ஆம் ஒவ்வொரு பெண்ணிற்கும் அது விலைமதிப்பற்ற சொத்தாகத்தான் இருக்கிறது. அதன் அழகு கெடாதிருக்க தாய்பால் ஊட்டுவதையே தவிர்த்து ஏமாந்தவர்கள் ஏராளம்.

அதன் இழப்பு பேரிழிப்பு. உயிரைத் துறப்பதினிலும் மோசமான அனுபவமாக இருக்கும். எட்டிப் பார்க்கும் உடையணிந்து மற்றவர்களை மயங்க வைப்பதுடன் தாங்களும் அதில் கிறங்கவே செய்கிறார்கள். இருந்தபோதும் அதன் மதர்ப்பில் பெருமை கொள்ளும் அளவிற்கு அதன் நலத்தில் அக்கறை கொள்கிறார்களா என்பது மற்றொரு பிரச்சனையாகும்.

இது இவ்வாறிருக்க மே 15ல் The Guardian இல் வந்த கட்டுரை எம் எல்லோரையும் ஆச்சரியத்தில் மூழ்க வைத்தது. அஞ்சலினா ஜோலி ஒரு பிரபலமான ஆங்கில நடிகை. பல இளசுகளின் கனவுக் கன்னி. ஆஸ்கர் பரிசு பெற்ற நாயகி. மதிப்பிற்குரிய இயக்குனரும் கூட. ஆறு பிள்ளைகளின் தாய். அதில் மூன்று வளர்ப்புக் குழந்தைகள். ஏனைய மூன்றும் நடிகரான கணவர் Brad Pitt ற்குப் பிறந்தவை.

அவர் தனது இரு மார்பகங்களையும் சத்திரசிகிச்சை மூலம் அகற்றியிருக்கிறாள் என்பதுதான் அச் செய்தி.

மருத்துவக் காரணங்களுக்காக, ஆனால் மருத்துவர்களின் நிர்ப்பந்தம் இன்றி, தனது விருப்பத்தின் பேரில் அகற்றியிருக்கிறாள். நோய் வந்து விட்டதற்காக அல்ல. நோய் வரக் கூடாது என்பதற்காக மார்பைத் தியாகம் செய்தாள்.

"அவள் ஒரு துணிச்சலான பெண்" என வெளியுறவுச் செயலாளர் William Hague இது பற்றிக் கூறியிருப்பது முற்றிலும் உண்மைதான். ஒரு நடிகைக்கு அவளது மார்பகங்களின் கவர்ச்சி மிக அவசியமானது. இதுவே அவளது வாழ்வாதாரம். இருந்த போதும் அதை இழக்க நேர்ந்ததை வெளிப்படையாக உலகிற்கு அவளே துணிச்சலோடு அறிவித்திருக்கிறாள்.

உலகளாவிய ரீதியில் 1.38 மில்லியன் புதிய மார்பகப் புற்றுநோயாளிகளை 2008ல் மட்டும் கண்டறிந்ததாகச் சொல்லப்படுகிறது.

இலங்கையில் ஒவ்வொரு இலட்சம் பேரில் 25 பேர் மார்பகப் புற்றுநோயால் பாதிக்கப்படுகிறார்கள்.

புற்றுநோய்களால் பெண்களில் ஏற்படும் மரணங்களில் அதிகமானவை மார்பகப் புற்றுநோயினாலேயே ஆகும். ஒவ்வொரு இலட்சம் பெண்களில் 4.7 பேர் மரணிப்பதற்கு மார்பகப் புற்றுநோயே அடிப்படைக் காரணியாக இருக்கிறது.

ஏனைய நாடுகளைப் பார்க்கும்போது ஆபிரிக்காவில் ஒவ்வொரு இலட்சம் பேரில் 19.3 பெண்களுக்கும், ஐரோப்பிய நாடுகளில் 89.7 ஆக இருக்கிறது. வளர்ச்சியடைந்த நாடுகளில் ஜப்பானில் மட்டுமே அதன் தாக்கம் குறைவாக இருக்கிறது.

மிக அதிகமானோரைப் பீடிக்கும் புற்றுநோயாக இது இருந்தபோதும், அந் நோயால் ஏற்படும் இறப்புகளைப் பொறுத்தவரை இது ஐந்தாம் இடத்திலேயே இருக்கிறது. இதற்குக் காரணம் இன்று மார்பகப் புற்றுநோய்க்கு நல்ல மருத்துவம் இருப்பதுதான். ஏனைய பல புற்றுநோய்கள் போலன்றி பூரணமாகக் குணப்படுத்தக் கூடியதாகவும் இருக்கிறது.

நோயாளிகள் காலந்தாழ்த்தி மருத்துவ உதவி பெறச் செல்வதே அநாவசிய மரணங்களுக்குக் காரணமாக இருக்கிறது என்பது மருத்துவர்களின் கணிப்பாகும். ஏனெனில் களப்புற்றுநோய், குதப் புற்றுநோய் போலன்றி மார்பகப் புற்றுநோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிவது சுலபமானது.
இருந்தபோதும் பலரும் இது பற்றி அக்கறை கொள்வதில்லை. மக்களிடையே இந்நோய் பற்றிய விழிப்புணர்வு ஏற்படவேண்டும் என்பதற்காகவே அஞ்சலினா ஜோலி தனது சத்திரசிகிச்சை பற்றி ஊடகங்கள் மூலம் உலகெங்கும் பறைசாற்றியுள்ளாள்.

இலட்சக்கணக்கான மக்கள் மனங்கவர்ந்த திரைப் பிரபலங்கள் நோய்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த முன்வருவது வரவேற்கத்தக்கது. எமது ரஜனி, ஹிந்திப் பிரபலம் அமிதா பச்சன் போன்றவர்கள் போலியோ பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த முன்வந்தவர்கள் என்பதைக் குறிப்பிடலாம்.

ஆரம்ப நிலையில் கண்டறிவது
இந்நோயை ஆரம்ப நிலையில் கண்டறிவது எப்படி? இலங்கை புற்றுநோய் தடுப்புச் சங்கம் சிபார்சு செய்துள்ள ஆலோசனைகள் இவை.
மார்பு சுய பரிசோதனை

* 20 வயது முதல் 40 வயதான பெண்கள் மூன்று வருடங்களுக்கு ஒரு முறை மருத்துவ

(30ஆம் பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அ. முத்துலிங்கம்

# பெயர்கள்

இப்பொழுது சில காலமாக புதுவிதமான கடிதங்கள் வரத் தொடங்கியிருக்கின்றன. ஒரு மின்னஞ்சல் நண்பர் தனக்கு ஆண் குழந்த பிறந்திருக்கிறதென்று எழுதிவிட்டு நல்ல பெயர் ஒன்று சூட்டச் சொன்னார். நான் அவருக்கு மூன்று நான்கு பெயர்களை எழுதி அனுப்பினேன். அவர் என்ன பெயர் வைத்தார் என்பது தெரியாது.

இன்னொருவர் பெண் குழந்தைக்கு பெயர் வைக்கவேண்டும் என்று எழுதினார். சுத்த தமிழ் பெயராக இருக்கவேண்டும். ஆனால் 'குந்தவி, குழலி, குணவதி' போன்ற பெயர்கள் வேண்டாம் என்று நிபந்தனை போட்டுவிட்டார். நான் பெயர் சூட்டும் மண்டபம் ஒன்று வைத்து நடத்துகிறேன் என்று அவர் நினைக்கிறார்.

ஒரு காலத்தில் எங்கள் ஊரில் விதம் விதமான பெயர்களை வைத்தார்கள். இப்பொழுது அப்படியான பெயர்களைக் காணமுடியாது. சடங்கு, குருத்து, பழந்தின்னி, படைக்கலம் போன்ற பெயர்கள் ஞாபகத்துக்கு வருகின்றன.

கூந்தலழகி, கண்ணழகி போன்ற பெயர்களும் இருந்தன. ஆனால் மூக்கழகி, இமையழகி, புருவஅழகி, கழுத்தழகி, நாக்கழகி போன்ற பெயர்கள் இல்லை. கூந்தலுக்கும் கண்ணுக்கும்தான் இடமிருந்தது. மற்ற அவயவங்கள் பெயர்களுக்கு உசிதமாகப் படவில்லை. 'முழங்கை அழகி' எத்தனை முக்கியம்.

ரஸ்ய எழுத்தாளர் ரோல்ஸ்ரோய் ஒருநாள் கனவில் அழகான முழங்கை ஒன்றைக் கண்டார். அதிலிருந்து பிறந்ததுதான் அவருடைய புகழ்பெற்ற நாவல் அன்னா கரீனினா என்று சொல்வார்கள். முழங்கை, முழங்கால் கணுக்கால் முதுகெலும்பு ஒன்றும் பெயர் வைக்க உதவாத அங்கங்கள்.

நான் சிறுவனாயிருந்தபோது எங்கள் ஊர் ஓர் அரசியல்வாதியின் பிடியில் இருந்தது. அவர்தான் குழந்தைகளுக்கு பெயர் வைத்தார்.

ஆரம்பத்தில் நல்லாகத்தான் இருந்தது. கபிலர், பரணர், ஔவை, நற்கீரன், வளவன் என்றெல்லாம் தொடங்கி பெயர்களின் இருப்பு குறைய குறைய தாழ்வாரம், உசாத்துணை, முறிமருந்து, ஆரத்தழுவி என்றெல்லாம் பெயர் சூட்டத் தொடங்கிவிட்டார். கிராமம் அவர் கட்டுப்பாட்டில் இருந்தது. பேய்க்கு சாப்பாடு போட்டால் நீண்ட அகப்பை வேண்டும் என்று சொல்வார்கள். ஆனால் அந்தப் புத்திமதியை அங்கே ஒருவரும் கேட்கவில்லை. ஒரு பெண் குழந்தைக்கு 'மாருதப்புரவீகவல்லி' என்று பெயர் சூட்டினார். அதுவே கடைசி என்று நினைக்கிறேன். அந்தப் பெண் ஏழு வயதுக்குப் பின்னர் பள்ளிக்கூடத்துக்கு போக மறுத்துவிட்டாள். பிள்ளைகளின் கேலி தாங்க முடியாமல் படிப்பையே விட்டுவிட்டாள் என்று கேள்விப்பட்டேன்.

என்னிடமும் நல்ல பழங்காலத் தமிழ் பெயர்கள் உள்ளன. அந்தக்காலத்துப் புலவர் பெயர்கள் அவருடைய ஊரைச் சொல்லும் அல்லது அவருடைய உருவத்தை சொல்லும். கோவூர் கிழார், மாங்குடி மருதனார் என்பன ஊரைச் சொல்லும். இரும்பிடர்த்தலையனார், கழாத்தலையர், ஓர் ஏர் உழவனார் போன்றவை புலவரை வர்ணிக்கும். மற்றவர்களிடம் ஐந்தாறு ஏர்கள் இருந்திருக்கும். இவரிடம் மாத்திரம் பாவம் ஏழை, ஓர் ஏர்தான் இருந்திருக்கவேண்டும்.

இப்பொழுது ஒருவருக்கு 'நரிவெரூஉத்தலையார்' என்று பெயர் சூட்டினால் எப்படியிருக்கும். பா என்ற எழுத்தில் தொடங்கும் பெயர் கேட்டு என்னிடம் யாராவது வந்தால் 'பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்' என்ற பெயரைச் சூட்டுவதற்காக நெடுங்காலமாக காத்திருக்கிறேன்.

சில நாட்களுக்கு முன்னர் ரொறன்ரோவில் ஓர் இளைஞரைச் சந்தித்தேன். அவருடைய பெயர் என்னவென்று கேட்டேன். அவர் அஷ் என்றார். மீதி எங்கே என்று வினவினேன். (கமலஹாசனின் அபூர்வசகோதரர்கள் படத்தில் குள்ள கமலைப் பார்த்து நாகேஷ் 'பாக்கி எங்கே ஐயா?' என்று கேட்பார்.) இந்தப் பையன் இதுதான் முழுப்பெயரும் என்றான். என்ன பொருள் என்றேன். அம்மாவிடம் கேட்டேன் அவருக்கு தெரியவில்லை. 'நான் நினைக்கிறேன் சிறு குழந்தையின் தும்மலாகவிருக்கும்' என்று பதில் கூறினான்.

இப்பொழுது இரண்டெழுத்து, மூன்றெழுத்துப் பெயர்கள்தான் பிரபலம். எமி என்றால் தனிமை. ஐது என்றால் அழகு. சிதர் என்றால் மழைத்துளி. இவை எல்லாம் பழங்காலத் தமிழ் சொற்கள். வைதேகி ஹேர்பர்ட் (Vaidehi Herbert) தன்னுடைய வலைத்தளத்தில் நிறைய குழந்தைகள் பெயர்களை இட்டிருக்கிறார். எல்லாமே 2000 வருடம் பழமையான தமிழ் பெயர்கள்.

தமிழிலிருந்து சமஸ்கிருதத்திற்கு போன சொற்களும் உள்ளன. கீழே வருவதுதான் அவருடைய வலைத்தளம். அந்தப் பக்கம் போகும்போது அவருடைய சங்கப்பாடல்கள் ஆங்கில மொழிபெயர்ப்பையும் படித்துப் பாருங்கள். அங்கேயே அசந்துபோய் நின்றுவிடுவீர்கள்.

http://puretamilbabynames.wordpress.com/pure-tamil-baby-names-for-girls/

நான் இன்றுடன் பெயர் சூட்டும் கடையை மூடிவிட்டேன்..●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'சிந்தனைப் பூக்கள்' எஸ். பத்மநாதன்

# மனமே! நலமா?

34

உடலும் மனமும் ஒன்றிணைந்து செயல்படுவது ஓர் அற்புதமான இயக்கமாகும். மனதிற்கும் உடலுக்கும் உள்ள தொடர்பு மிகவும் சிக்கலானது. எமது உடல் மூலம் தொடுகை, அசைவு, பார்வை, குரல் என்பனவற்றை மேற்கொள்ளும்போது மனமே செல்வாக்கு செலுத்துகின்றது. உடலில் உள்ள கலங்கள் ஒவ்வொன்றும் தமக்குள் தொடர்பு கொள்வதால் அதிலிருந்து உருவாகும் சக்தியே எம்மை அசைக்கிறது. அதேவேளை மனம் என்றும் எண்ணங்களையும், சிந்தனைகளையும் ஒன்றிணைத்து நிற்கிறது.

கருவில் உள்ள சிசு கூட இயங்கு நிலையில் உள்ளது. அங்கு கூட மனம் உண்டாகியிருக்கக்கூடும் என்பது அறிஞர்களின் முடிவாகும். காரணம் குழந்தை கருப்பை நீரில் நீந்துகிறது; கால்களால் வயிற்றினை உதைக்கிறது; விரலை சூப்புகிறது; தொப்புள்கொடியுடன் விளையாடுகிறது; தலையை அங்குமிங்கும் அசைக்கிறது; பிறக்கும்போது தலையைக்கூட சரியான நிலைக்கு திருப்புகிறது. சுய அறிதுயில் (Self Hypnotism) மூலம் குழந்தையை பிறப்பிக்கும்போது இந்த அதிசய நிகழ்வு அவதானிக்கப்படுகிறது. கருப்பைக்குள் நடைபெறும் அதிசயம் எவர்க்கும் மிகுந்த ஆச்சரியத்தையே தரும்.

வெளியுலகிற்கு வந்த ஒவ்வொரு குழந்தையும் பல புதிய அனுபவங்களை பெறும்போது மனநிலையும் பெரிய மாறுதலை கொள்ளும். இவ்வாறு படிப்படியாக வளர்ச்சியுறும் மனித மனத்தினை சிக்மண்ட் பிராய்ட் (Sigmund Freud) என்ற உளவியலாளரே ஒரு ஒழுங்கான வகையில் பிரித்து ஆராய்ந்துள்ளார். 1881ல் ஆஸ்திரியாவில் பிறந்த இவரது 'உளப் பகுப்பாய்வு' (Psycho Analysis, கோட்பாடு இன்றுவரை பலராலும் வரவேற்கப்பட்டு வருகிறது. இவரது கருத்தின்படி நனவில் மனச் செயல்பாடு (Unconcious Mental Process) முக்கியம் பெறுகிறது. இதில் முதல் நிலை இட் (ID) என்பதாகும். இதனை ஆழ்மனவுந்தல் உணர்வுந்துதல் என்றவாறு கொள்ளலாம். உடனடியான தேவைகளை பூர்த்தி செய்யும் உணர்வே இது. பசி, தாகம், தவிப்பு, கோபம், பாலியல் போன்றவற்றினை எழுப்பி நிற்கும். அதாவது பக்குவப்படாத மனநிலை இதுவாகும். அடுத்துள்ள மனநிலை நான், அல்லது அகந்தை கொண்ட குணாதிசயமாகும். இதனை 'Ego' என்று கொள்ளலாம். தன்முனைப்பாக கொண்ட மனமாக கொள்ளலாம். இன்று பலரை ஆட்டிப் படைக்கும் மனநிலை இதுவாகும். அடுத்துள்ள மனநிலை மேல் மனம் (Super Ego) ஆகும். இது கீழ்மனத்தின் செயலை இடித்துரைக்கும் அல்லது கட்டுப்படுத்தும் தன்மை வாய்ந்தது. இதனை அதியகம் எனவும் கொள்ள முடியும். இந்த அடிப்படையிலேயே ஒருவரின் மனநிலை பற்றி அறிய முடிகின்றது.

ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள்போல மனம், உடல் ஆகியவை ஒன்றிணைந்து செயல்பட்டால் மட்டுமே எம்மால் வாழ முடியும். ஒவ்வொரு நாளும் நாம் நகர்வது நமது எண்ணங்களிலேயே தங்கியுள்ளது. புது புது அனுபவங்கள் எம்மை மாற்றுகின்றன; வேறு வேறு புலக்காட்சிகளும் எம்மிடம் சேர்ந்து கொள்கின்றன. மனநிறைவுள்ள உடல் (Minfullness of body) எமக்கு ஏற்படுவது இன்றியமையாதது.

மனத்தினை நல்வழியில் மாற்ற முயல்வோம்.
மீண்டும் சந்திப்பேன்...●

# மல்லிகையின் எதிர்காலம்.....



**இலங்கையிலிருந்து கடந்த நாற்பத்தெட்டு ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக வெளிவந்ததென்ற பெருமை டொமினிக் ஜீவாவின் 'மல்லிகை' சஞ்சிகைக்குண்டு. சஞ்சிகையின் பொன்விழாவுக்கு இன்னமும் இரண்டு ஆண்டுகளேயுள்ள நிலையில், கடந்த சில மாதங்களாக அது வெளிவரவில்லை. ஜீவாவின் உடல்நலக்குறைவே இதற்குக் காரணம். அவரது மகன் திலீபன் மல்லிகையைக் கொண்டு வருவாரென்ற நம்பிக்கை பலருக்குமுண்டு. கடந்த மாதம் ஜீவாவின் 86வது பிறந்தநாள் விழா கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் நடைபெற்றது. தந்தை டொமினிக் ஜீவா முன்னிலையில் இங்கு உரையாற்றிய மகன் திலீபன் தனது மனநிலையை வெளிப்படுத்தி நிகழ்த்திய உரையை அவரது நடையில் அப்படியே கீழே உள்ளது.**

"நானொரு புகைப்படக் கலைஞன், இலக்கியத் திறமை எனக்கில்லை. முழுப் பொறுப்பையும் எடுத்து மல்லிகையை என்னால் வெளியிட முடியாது. ஐயா ஒரு நாள் மல்லிகை காரியாலயத்தில் தடுக்கி விழுந்துவிட்டார். தொலைபேசி மூலமாக செய்தி கிடைத்தது. நான் வந்து பார்த்தபோது கதிரையில் சாய்ந்தபடி இருந்தார். நவலோக ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றோம். ஒரு நாள் முழுவதும் சிகிச்சை அளித்தனர். டாக்டர் ஐயாவைப் பாதுகாக்கச் சொன்னார். என்னை வளர்த்து இந்த நிலைக்குக் கொண்டு வந்தவர் ஐயா. அவரை நான் பாதுகாக்க வேண்டும். எனவே நான் எனது பெற்றோரை வீட்டில் தங்க வைத்துப் பாதுகாக்கின்றேன்.

திருமணம் நடத்துவது ஒரு நாள் கூத்து. மல்லிகை வெளிவர வேண்டும். என்னால் அது முடியாது. 4 மாதங்கள் மேமன் கவியின் உதவியோடு வெளியிட்டோம். மாதமொன்றுக்கு 4500 ரூபா செலவானது. கருத்துகள் வெளியிலிருந்து வந்தன. மேமனிடம் சொல்லி நிற்பாட்டினோம். மல்லிகை இனி வெளிவருவது அதன் அபிமானிகளின் கையில்தான் உண்டு."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனகேஸ்வரி நடராஜா



# 1915இல் ஆசிரியர்களுக்கான நடத்தை விதி முறைகள்
# 1915 Code of Conduct for teachers

இன்றைய பாடசாலைகளில் ஆசிரியர்களின் அதிலும் பெண் ஆசிரியர்களின் நடை, உடை, பாவனைகளைப் பார்க்கும் பொழுது, ஒரு நூற்றாண்டுக்கு முன்பு இங்குள்ள ஆசிரியர்களின் வாழ்க்கை விதிமுறைகள் எவ்வளவு கட்டுப்பாடுகளுடன் காணப்பட்டன என்பதை நம்ப முடியாமல் இருக்கிறது. பல மாற்றங்கள் ஒரு நூற்றாண்டு காலத்தில் ஏற்பட்டாலும் ஆசிரியர்கள் தாங்கள் மாணவர்களுக்கு ஒரு முன் உதாரணமாக (Role Model) இருக்க வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் எப்பொழுதும் செயல்படுகிறார்கள். இதன் காரணமாக ஆசிரியர்களில் பெரும்பான்மையோர் மிகவும் கண்ணியத்தோடும், கட்டுப்பாட்டோடும் வாழ்வதையே காணக் கூடியதாக உள்ளது.

அக்காலத்தில் கனடா நாட்டில் ஒரு சிலரைத் தவிர எல்லோருமே விவசாயிகளாக இருந்தனர். விவசாயத்தில் பெற்றோருக்கு உதவி செய்வதே பிள்ளைகளின் முதற் கடமையாக இருந்தது. படிப்பெல்லாம் இரண்டாம் பட்சம்தான். அறுவடை காலத்தில் முழுக் குடும்பமுமே வயல்வெளிகளில் வேலை செய்தேயாக வேண்டிய நிலை. இதன் காரணமாகத்தான் அக்காலத்தில் கோடை விடுமுறையாக இரண்டு மாதத்தை ஒதுக்கினார்கள். சந்தை நாட்களில் முட்டை, பழங்கள் முதலியவற்றை தாய்மார் சந்தைக்கு எடுத்துச் செல்வதற்குப் பெண் பிள்ளைகளின் உதவியும் தேவைப்பட்டது. பாடசாலை ஒரு அறைக் கட்டிடமாகவே இருந்தது. வெவ்வேறு வயதினைச் சார்ந்த பல பிள்ளைகள் இந்த ஒரு அறை பள்ளிக்கூடத்தில் ஒரு ஆசிரியரின் கீழ் கல்வி கற்றனர். மாணவர்களின் வயதுக்கும், வகுப்புக்கும், ஆற்றலுக்கும் ஏற்ப வெவ்வேறு விதமாகக் கல்வி புகட்ட வேண்டியது ஆசிரியரின் கடமையாகும்.

பொதுவாக இந்த ஒரு ஆசிரியர் ஒரு பண்ணைக் குடும்பத்துடன் ஒரு வருடம் தங்கியிருப்பார். வருடா வருடம் அவரின் இருப்பிடம் மாறுபடும். விவசாயிகள் தங்களோடு ஆசிரியரை வைத்திருப்பதை ஒரு பெரும் பேறாகவே கருதினர். சிலசமயங்களில் ஒரு அறைப் பாடசாலைக்குப் பக்கத்திலேயே ஆசிரியர் தங்குவதற்கும் ஒரு அறை வழங்கப்படுவதும் உண்டு.
ஒரு நூற்றாண்டுக்கு முன்பு ஆசிரியர்கள் கடைப்பிடிக்கப்பட வேண்டிய ஒழுங்குவிதிகளைப் பார்க்கும் பொழுது எவ்வளவு ஒரு கட்டுப்பாடான - கிட்டத்தட்ட ஒரு துறவி போன்ற வாழ்க்கையை ஆசிரியர்கள் வாழ்ந்தார்கள் என்பது புலனாகிறது. அவையாவன:-

* ஒவ்வொரு நாளும் ஆசிரியர் வகுப்புக்கு ஒரு வாளி தண்ணீரும், ஒரு வாளி கரியும் கொண்டு வர வேண்டும். மாணவர்கள் வருவதற்கு முன்பு வகுப்பைக் கூட்டி துப்பரவாக வைத்தல் வேண்டும். குளிர்காலத்தில் கரியை மூட்டி வகுப்பினை வெப்பமாக வைத்திருத்தல் அவசியம். (இன்று மாணவர்கள் தும்புத் தடியை கையால் தூக்கியதைக் காண முடியவில்லை. பாடசாலையை வெப்பமாகவோ, குளிராகவோ வைத்திருப்பதற்கென்று எவ்வளவு பணம் செலவிடப்படுகிறது என்பதை எல்லோரும் அறிவார்கள்)
* மாணவர்களின் பேனைகளுக்குத் தேவையான மையை மாணவர்களின் மேசையிலுள்ள குப்பிகளில் நிரப்பி ஆயத்தப்படுத்தல் வேண்டும். (நாங்கள் பாடசாலைக்குச் சென்ற ஆரம்ப காலத்தில் இத்தகைய குப்பிகளும் நிப்பு பேனைகளும் பாவனையில் இருந்தன. வெள்ளைச் சீருடையில் மை அடையாளம் படாத நாளே இருக்கவில்லை)
* பெண் ஆசிரியைகள் தாங்கள் தொழில் புரிவதாக ஒப்பந்தம் செய்த காலகட்டத்தில் ஆண்களோடு சிநேகிதம் வைப்பதோ, திருமணம் செய்வதோ ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. (எங்கள் நாட்டிலும் பல கிறீஸ்தவ மிஷன் பாடசாலைகளில் பெண் ஆசிரியர்கள் திருமணம் செய்தபின்பு வேலையால் விலகுவதுண்டு)
* புகைத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டது.
* எந்த ஒரு வகையான மதுபானமும் பாவிக்க முடியாது. (எத்தனையோ ஆசிரியர்கள் தங்கள் போதனை இல்லாத பாடசாலை நேரத்தில் வெளியே சென்று புகைத்தல் இங்கு ஒரு சர்வசாதாரண விடயம். இதற்குப் பெண் ஆசிரியர்களும் விதிவிலக்கல்ல. இந்த வருடம் சில பாடசாலைகளில் மாணவர்கள் வருட இறுதியில் தங்கள் ஆசிரியர்களுக்கு Gift Cards for Liquor ஐ வழங்கி தமது நன்றியைத் தெரிவித்திருந்தனர். பல பெற்றோர் அதில் ஒருவிதமான பிழையும் இல்லை என்று வாதாடியதையும் பத்திரிகைகளில் பார்த்திருப்பீர்கள்)
* ஆசிரியர்கள் நகரின் எல்லைக்கு அப்பால் செல்வதற்கு கல்விச் சபையிடமிருந்து விசேட உத்தரவு பெறல் வேண்டும். பெண் ஆசிரியர்கள் இரவு 8 மணிக்கும் காலை 6 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் பாடசாலை சமூக நிகழ்ச்சியில் அன்றி வேறு ஒரு இடமும் செல்லக்கூடாது. பாடசாலையில் 10 மணித்தியாலங்களைக் கழித்த பின்னர் மிகுதி நேரத்தை பைபிள், வேறு நல்ல நூல்களை வாசிப்பதில் கழித்தல் வேண்டும்.
* ஆண் ஆசிரியர்கள் கிழமையில் ஒரு நாள் பிற்பகல் தமக்கு வருங்காலத் துணைவியைத் தேடுவதற்காகச் செலவழிக்கலாம். ஒழுங்காகச் சேர்ச்சுக்குச் செல்வாராகில் இரண்டு நாள் பிற்பகலை தனது சுயதேவைக்குச் செலவழிக்கலாம்.
* பெண் ஆசிரியைகள் கடும் நிற ஆடைகளை அணியக் கூடாது. தலைமயிருக்குச் சாயம் இடுதல் தவிர்க்கப்பட வேண்டும். இவர்கள் இரண்டு உள்ளாடை (Petticoats) அணிதல் வேண்டும். பெண் ஆசிரியர்கள் கணுக்காலுக்கு இரண்டு அங்குலத்துக்கு மேலே போகாதவாறு நீண்ட அங்கி அணிதல் வேண்டும். (ஆசிரியைகள் மேல் கழிவு இரக்கம்தான் ஏற்படுகிறது. இன்றும் பாடசாலையில் ஆசிரியைகள் நவீன உடைகளை அணிந்தாலும் மிகவும் மரியாதைக்குரிய வகையில்தான் அணிகிறார்கள்)
* ஒரு பிழையும் விடாமல் தொடர்ந்து 5 வருடம் தொழில் புரியும் ஆசிரியர்களுக்கு 25 சதம் சம்பள உயர்வு வழங்கப்பட்டது. (இன்று வருடாவருடம் சம்பள உயர்வு வழங்கப்படுகிறது. ஆசிரியர் சங்கங்கள் மிகவும் பலம் உள்ளதாக இருப்பதால், எந்த ஒரு ஆசிரியரையும் இலகுவாகத் தண்டிக்க முடியாது. பிழைகள் விடும் ஆசிரியர்கள்கூட சம்பளத்தோடுதான் விலக்கப்படுகிறார்கள். அவர்களின் பிழை விளக்கத்தின் பின் நிரூபிக்கப்பட்டால் ஒழிய சம்பளத்தில் கை வைக்க முடியாது)
* ஆசிரியர்களுக்குப் பென்ஷன் வசதி இருக்கவில்லை. ஒவ்வொரு மாதமும் தனது சம்பளத்தில் ஒரு சிறு தொகையை சேமித்து வைத்து அதனை ஓய்வு பெற்ற பின்பு உபயோகப்படுத்துதல் அந்தந்த ஆசிரியரின் பொறுப்பாகும். (இன்று ஓய்வூதியம் பெறும் ஆசிரியர்கள் மிகவும் வசதியாக வாழ்வதைக் காணக் கூடியதாகவுள்ளது. அவர்களின் சேவைக் காலத்தை பொறுத்து ஓய்வு ஊதியத் தொகை வேறுபடலாம்)
ஒரு நூற்றாண்டு இடைவெளியில் ஆசிரியர்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது. இன்னும் ஒரு நூற்றாண்டு கழித்து ஆசிரியர்களின் வாழ்க்கையை இன்றைய ஆசிரியர்களின் வாழ்க்கையோடு ஒப்பிடு பார்க்க நேர்ந்தால் இன்றைய ஆசிரியர்களின் மேல் வருங்காலச் சந்ததியினருக்கு இரக்கம் ஏற்படலாம்.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். ஜெகதீசனின் பத்தாம் பக்கம்

# அழகுக்கு வயதில்லை

வயதாகிவிட்டது என்ற எண்ணம் ஏற்படின் அழகுக்கலை நிபுணர்களை நாடும் வெள்ளைமனதுக்காரரிடம் தமது அழகை உலகமே ரஸிக்க வேண்டும் தமது அழகு ஆராதிப்பதற்கே போன்ற தாராளமயமாக்கல் பாடாய்ப்படுத்திடும்.

பெருத்த இடுப்பு, தொங்கும்...கன்னங்கள், காணமல்போன கழுத்து, பூச்சி கடித்தது போல் வீங்கிப்போன கை கால்கள் போன்றவை கற்பனைக்குக் கூட அழகு சேர்ப்பதில்லை.
வழுக்கைத் தலைக்கு முடிவு வைக்க வாலிபர்கள் விரும்புவதும் முடி வைக்க வயோதிபர்கள் விரும்புவதும் அழகுக்கு வயதில்லை என்பதற்கு ஒரு சிறியசான்று. எனினும் காற்றில் ஆடும் முடிகளுக்கு கருணையற்ற மனது என்ற அவர்கள் ஏக்கத்துக்கு ஏது வயது?
இல்லாததை இருப்பதாகக் காட்டுவதும் ஒரு அழகு. இருப்பதை இல்லாததாகக் காட்டுவதும் ஒரு அழகு.

திருந்த விரும்பாதவர்கள் திரும்பிப்பார்க்காத இடமாக அழகு நிலையங்களை புறக்கணிப்பதில்லை. பிரபலமான சில சொற்களுக்கு அர்த்தம் தெரியாது தலை கொடுக்கவும் மயிரிழையில் மாட்டிக்கொள்ளவும் யாரும் தயாரில்லை என்பதே உண்மை.

அழகில் மயங்கும் பலர் அழகியற்கூடங்களை அலங்கரிக்கும் unisex என்ற பதத்தில் மயங்குவர். அவை ஆண்களுக்கு மட்டுமே உரியது அல்லது பெண்களுக்கே உகந்தது என படித்தவர் தடுமாறுவதும் உண்டு. ஆனால் அது இரு பாலருக்கும் பொதுவானது. uni என்றால் ஒன்று bi என்றால் இரண்டு என எமது ஞாபக அடுக்கில் வேற்று மொழி வார்த்தைகள் படிந்திருப்பது தான் இந்த தவறுக்கு காரணமாகும். வட அமெரிக்காவில் bi என்ற சொல் ஆணுமற்ற பெண்ணுமற்ற மனிதரை குறிக்கவும் பயன்படுகின்றது.

உடல் அழகை ஆரோக்கியமானதாக்குவது உடற்பிடிப்பு (massage) எனக் கருதுவது மேலைத்தேச நாகரீகம். சருமத்தை பாதுகாத்து பராமரிப்பதும் இதன் கருமங்களில் ஒன்று. தோலின் நுண்துளைகளை விரிவடைய வைத்து அதிக வியர்வையை வெளியேற்றும். தசைகளில் படிந்துள்ள லக்டிக் அமிலத்தை (lactic acid) நீக்கி இறுக்கத்தை தளர்த்தி வலியை குறைத்து புதிய உணர்வையும் சக்தியையும் அதிகரிக்கும். அதற்கும் அப்பால் இதயத்துக்கும் நரம்புகளுக்கும் இதமளிக்கும்.

அழகு முகத்தில் அகலாமல் ஏய்க்கும் புருவம் உட்பட உடலில் அனாவசியமானதாகத் தோன்றும் உரோமங்களை சமய ரீதியாகவோ மருத்துவ ரீதியாகவோ அகற்றி அழகு சேர்ப்பவர்களும் உண்டு. தலை மயிர் வெட்டுவதற்கு (hair cut) மொழி தடையாக இருப்பதில்லை. கொஞ்சம் (short) மத்திமம் (medium) நீளம் (long) என்பன தெரிந்திருந்தால் எமது தலை எம்முடனிருக்கும்.

தலைமுடியை சுருளாக்குவது (perm) எப்படி எனத்தெரியாது மனதை சுருட்டிக்கொள்வோரும் எம்மிடம் உளர். நிரந்தரம் தற்காலிகம் என இரு பிரிவுகள் இதற்கு இருப்பதாக கூறப்படினும் நிரந்தரம் என்பதும் நிரந்தரமல்ல. இரசாயன கலவைகளை கூந்தலுக்கு ஊட்டி அதனை ஏற்ற வகையில் சுருட்டி விடும் நிபுணர்களிடம் தலைகாட்டியவர்கள் இதை அனுபவித்திருப்பர்.

சுயமாகவோ அல்லது மின்சாதனங்களுடனோ சவரம் செய்ய (shaving or trimming) முளைத்தவர்களுக்குத் தெரியும். ஆனால் கொஞ்சம் விபரமறிந்த ஒருவர் (deplilatory) என்ற சொல்லை எமது காதுகளில் தீட்டினால் அவர் இரசாயன கலவைகளால் (calcium thioglycolate or potassium thioglycolate) மயிரை கரைக்க முடிவெடுத்திருப்பார் என்பது அர்த்தம்.

பல நாட்களல்ல பல வாரங்கள் நீடிக்கும் மயிரை வேருடன் அகற்றுவது (epilation) சாதாரணமானதல்ல. எனினும் எம்மிடம் பிரபலமாகி வருவது தற்காலிகமாக மெழுகிட்டு (waxing) வேரைத்துண்டிப்பதாகும். எட்டு வாரங்களின் பின் மீண்டும் அந்த இடங்கள் 'பற்றைக்காடாகி' விடும். கண் இமை முகம் மற்றும் அந்தரங்க பகுதிகள் என எங்கும் பலவிதங்களில் மெழுகிட முடியும்.

எம்மை முந்திக்கொண்டு எமக்குத் தெரியாமலே இங்கு வந்து விட்ட எமது கலாசாரம் மரையிடல். இப்பொழுதும் கூட மரையிடல் என்றால் என்ன என்று அறியாதவர்கள் அதன் ஆங்கில வடிவமான *threading* என்றால் ஓ'அதுவா என்பார்கள்' தடித்த இரு நூல்களை நன்கு முறுக்கி அவற்றினால் தேவையற்ற உரோமங்களை களைவதுதான் இதன் செயற்பாடு. இதன் மூலம் பல உரோமங்கள் ஒரே தடவையில் களையலாம். ஆனால் மிகவும் பழைய முறையாயில் நகங்களால் அல்லது சாமணம் *(forceps)* போன்ற கருவிகளால் ஒவ்வொன்றாக பிடுங்குவது மரையாடல் (tweezing) எனச் சிலரால் இன்றும் கடைப்பிடிக்கப்படுகின்றது.

முகத்திற்கு பொலிவூட்டும் முகஅலங்காரங்கள் (facial) பல வித அழகு சாதனங்களால் மேற்கொள்ளப்படும். மணப்பெண்ணின் தாயாரோ அல்லது பூப்படைந்த பெண்ணின் தாயாரோ இதற்கு நன்கு பரிச்சயமானவர்கள் என்று சொல்லப்படுவதுமுண்டு. நகங்களை அலங்கரிப்பது (mani cure) என்றும் அவற்றுடன் விரல்கள் பாதங்களை பராமரிப்பது (pedi cure) என்றும் அழைக்கப்படும்.

Spa என்றால் என்ன தெரியுமா? Sanus Per Aquam [S P A] - meaning health by or through water. நீரால் சுகமளிப்பது. அதனால் அழகுறுவது.

அடடா என்று மிரள வைக்கும் நிமிர்ந்த நெஞ்சுறுதிக்கும் திரண்ட முன்னழகுக்கும் கூட அழகு நிலையங்கள் உண்டு.

அது சரி. தலைக்குச் சாயம் பூசத் தெரியாமல் இங்கு யாராவது 'பிசிராந்தையர்கள்' இருப்பார்களோ? யாண்டுபலவாக நரையில ஆகுதல் யாங்கு ஆகியர்? என வினவுதிர் ஆயின் மாண்ட என் மனைவியோடு மக்களும் நிரம்பினர். யான் கண்ட அன்னையர் இளையரும் வேந்தனும் அல்லவை செய்யான். காக்க அதன்தலை ஆன்றுஅவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர் பலர் யான் வாழும் ஊரெ என புறநானூற்றில் கூறிப் போந்தவர் பிசிராந்தையர்.

உங்களின் தலை வெள்ளையாக இருக்கின்றது. ஆனால் தாடி மட்டும் கறுப்பாக இருக்கின்றதே' ஏதாவது சாயம் பூசுகின்றீர்களா? என்று கேட்டாராம் வாலிபர் ஒருவர். தலைமுடி அண்ணன். மீசையும் தாடியும் தம்பிகள். அதனால் அண்ணனுக்கு சீக்கிரம் நரைத்து விட்டது என்று அதற்கு பதிலளித்தாராம் ஒரு முதியவர். அது எப்படி அண்ணன் தம்பி எனத் தொடர்ந்தாராம் வாலிபர். பிறக்கும் பொழுது கூடவே பிறப்பது தலைமுடி. ஆனால் மீசையும் தாடியும் பதினைந்து பதினாறு வருடங்கள் பிந்தித்தானே வருவது. அதனால் தலைமுடி சீனியர். நரைத்துவிட்டார் என்றாராம் முதியவர்'●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொன்னையா விவேகானந்தன்

# நிறமுரண்கள் 6

குறித்த ஒரு இனத்தினது வீழ்ச்சியும் எழுச்சியும் தற்செயலாக நிகழ்ந்து விடுவதல்ல. நீண்ட தொடர்விளைவுகளின் முடிவுகளாகவே நிகழ்கின்றன.

தாயகத்திலே மறுக்கப்பட்ட உரிமைகள் நிறைந்த வாழ்வை மீண்டும் ஒரு இனத்தின் தொடர் இருப்புக்கான தளமாக வாழ்புலங்களில் கட்டியெழுப்ப முயன்றனர் தொடக்ககாலத் தமிழர்கள். அதற்காக அவர்கள் கொடுத்த விலை அதிகமாகவிருந்தது.

வரும்வழியில், வந்திறங்கிய பொழுதில், வாழத்தொடங்கிய நிலையில் என எல்லாத் தளங்களிலும் தமிழர் போராட்டங்களை எதிர்கொண்டனர். தனிமனித நிலையிலும், இனம்சார்ந்தும் எதிர்கொண்ட சிக்கல்களில் பெரும் சவால் மிக்கதும், புதுமையானதாகவும் அமைந்தது நிறவெறிக் காழ்ப்புணர்வுதான்.

வெள்ளைநிறம் கொண்டோர் வெளிப்படுத்திய இந்த வெறுப்புணர்வு தமிழர்களுக்கு மட்டும் எதிரானதாக இருக்கவில்லை.

வெள்ளைத்தோல் தவிர்ந்த எல்லோருக்கும் பொதுவானதாக அமைந்திருந்தது.
மொழி, வாழ்வனுபவம், பொருளாதாரம் என்ற எவ்வகைப் பலமும் இன்றி, தம் இருப்பை ஊன்றுவதற்காக அலுவலகங்களிலும் வேலைத்தளங்களிலும் பொதுவாக வெள்ளையர்களையே நாடவேண்டியிருந்தது.

அவர்களால் வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் நிறவேறுபாடு நோக்கில் தமிழர்கள் தாக்கத்திற்குள்ளாயினர்.

குடிவரவு, விசா போன்றவற்றிற்கான அலுவலகங்களில் பணிபுரியும் வெள்ளையர் தம்மை அணுகும் மனோபாவத்தை, கறுப்பர்களைக் கண்டால் வெளிப்படுத்தும் முகபாவத்தை கவிஞர் தம்பா பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"கற்றுக்கொள் கறுப்பு நாயே!
சாகப்பிறந்த பன்றியே
தொழுவத்தை விட்டு ஏன் வந்தாய் வெளியே?
கறுப்பர்கள் அழிந்தாலும் மட்டும்
புனிதமடையும் இந்தப்பூமி" (புலம் பெயர்ந்தோர் கவிதைகள் பக்கம் 61)

கறுப்பர்களைக் காணும் போதெல்லாம் வெள்ளையர் உள்ளத்தில் தோன்றும் உணர்வைக் கவிதையாக்கியிருக்கின்றார் தம்பா.

விசா, விசாரணை என அவ்வப்போது அலுவலர்களால் அழைக்கப்படும் தமிழர் பலர், நிறவெறிக் காழ்ப்புணர்வுகளை நேரிடையாகவே எதிர்கொண்டனர். அவர்களை எதிர்த்து வாதாடும் வல்லமை இன்றிக் குறுகிப்போயிருக்கின்றனர்.

செல்வம் அருளானந்தத்தின் கவிதை தமிழரின் தாழ்வுநிலையைத் தொடராய் வெளிப்படுத்துகின்றது.
"தலித்தாய்ப் பிறந்து
தமிழனாய் குனிந்து
கறுப்பனாய் எனை உணர்ந்தேன்" (மேலது பக் 66)
தாய்நாட்டில் தாழ்த்தப்பட்ட சமூகத்தவராக அவமானப்படுத்தப்பட்டோர், தமிழனாகவும் அவமானப்படுத்தப்பட்டனர், தொடர்ந்து குடியேறிய நாட்டில் வெள்ளைத்தோல் இல்லாக் காரணத்தால் அவமானமுற்றனர்.

மண்ணாசை கொண்ட ஐரோப்பிய அரசுகள் காலந்தோறும் வறிய நாடுகளைக் கைப்பற்றி ஆண்டிருக்கின்றன.

அந்நாடுகளின் குடிகளை அடிமைகளாகவும், கூலிகளாகவும் பயன்படுத்தித் தம் வாழ்வை வளமாக்கின. அவ்வாறு பல நூற்றாண்டுகளுக்கு முன்பு குடியேறியவர்களின் தலைமுறையினர் தாய்நாடுகளின் தொடர்பிழந்து ஐரோப்பிய வாழ்புலங்களிலே தங்கிவிட்டனர்.

சட்டமானது அனைத்து உரிமைகளையும் கொண்ட குடிமக்களாக அவர்களை அங்கீகரித்தாலும் இன்றுவரை வெள்ளையினத்தோர் உரிமைகள் மிக்க மனிதர்களாக நிறம் குறைந்தோரை ஏற்றுக்கொள்ளவில்லை.

நிறவேறுபாட்டுத் தாக்கங்களுக்குத் தொடர்ந்து ஆட்பட்டும், பழக்கப்பட்டும் வாழ்ந்த ஆபிரிக்க, கிழக்கைரோப்பிய மக்களோடு 1980களில் புதிதாக இணைந்து கொண்ட இனமாகத் தமிழர்கள் இருந்தனர்.

தாயகத்தில் இனமுரண்களுக்கு முகம் கொடுத்த தமிழர், வாழ்புலங்களில் நிறமுரண்களையும் வலுவோடுதான் எதிர்கொண்டனர்.

இன்றுவரை தொடர்ந்து கொண்டிருக்கும் நிறமுரண்களைத் தமிழர் வெற்றிகொண்டனர் என்று கூறமுடியாது.

ஆனால் அந்த முரண்களை மீறிப் பலமாக எழுந்தனர்.
கடினமான உழைப்பும், வேகமான பொருளாதார மேன்மையும், தாயகப் போராட்ட வலுநிலையும் வாழ்புல நிறமுரண்களை மீறியெழ உதவியது எனலாம்.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எம்மைச் சுற்றி நடப்பவைகளிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட சில சம்பவங்களைக் காய்தல் உவத்தலின்றி எழுதும் இந்தப் பத்தி (column). அவ்வப்போது வெளிவரும். கண்டவை, கேட்டவை, நடந்தவையே இதன் மூலாதாரம். ஒருவகையில் பார்த்தால் இதுவும்கூட தகவல்தான்.*

# இது எப்பிடி இருக்கு?

## பெண் பிரமுகர்கள் இங்கு தாராளமாக இருக்கிறார்கள்!

கனடாவில் இடம்பெறும் நடன அரங்கேற்றங்களில் பிரதம விருந்தினர்களாக பெண் பிரமுகர்கள் ஏன் அழைக்கப்படுவதில்லை என்ற தமது ஆதங்கத்தை ஓய்வு பெற்ற கல்வி அதிகாரியொருவர் கடந்த மாதம் இப்பகுதியில் வெளிளியிட்டிருந்தார்.

கடந்த மாதம் இடம்பெற்ற இரண்டு அரங்கேற்றங்களில் இவ்விடயத்தில் ஒரு மாற்றத்தைக் காணமுடிந்தது.

செல்வி சிவை சுபதரனின் வாய்ப்பாட்டு அரங்கேற்றத்தில் சிறப்பு விருந்தினர்களாக கலந்து உரையாற்றிய மூவரும் பெண்மணிகள். செல்வி லஷ்மி சிவனேஸ்வரலிங்கத்தின் பரதநாட்டிய அரங்கேற்றத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தவர் நாட்டியத் துறைசார் பெண் வித்தகர்.

இரண்டு நிகழ்வுகளிலும் பெண்மணிகளின் உரைகள் அறுவையின்றி, ஆழமாகவும், விடயத்துடன் சம்பந்தப்பட்டதாகவும் அமைந்து சபையோரைக் கவர்ந்தது.

## வேந்தனின் சீற்றத்துக்கு ஏன் இந்த அவமானம்?

ரொறன்ரோவில் கடந்த மாதம் 'Fetna' என்ற தமிழ் விழா நடைபெற்றது. இதில் இடம்பெற்ற ஒரேயொரு நாட்டுக்கூத்து, சட்டவாளர் மனுவல் ஜேசுதாசன் குழு வழங்கிய 'வேந்தனின் சீற்றம்'.

ஆனால், அந்தச் சீற்றத்தைக் காட்டும் இறுதிக் காட்சி இடம்பெறாமலே கூத்து முறிக்கப்பட்டது. காரணமானவர், விழா அமைப்பாளர்களில் ஒருவராகக் கடமையாற்றிய கலைத்துறை அம்மணியாம்.

நிகழ்ச்சியில் அடுத்து இடம்பெறவிருந்த விருந்துபசாரத்துக்கு முன்னர், இடைச்செருகலாக அரசியல்வாதி ஒருவரின் உரையை உட்புகுத்தவே 'சீற்றம்' காட்சி பறிக்கப்பட்டது நன்றன்று.

ஒத்திகை, மேடை அமைப்பு, ஒலிவாங்கி என்று எல்லாவற்றிலும் மாற்றாந்தாய் மனப்பான்மையில் இந்த நாட்டுக்கூத்தை விழாக்குழுவினர் நடத்திய விதம்.....

கர்ப்பூர வாசனை அறியாத கூட்டத்துக்கு கூத்துப் பற்றி என்ன விளங்கும்?

## 'யாதும் ஊரே யாவரும் கேளிர்'; இதனை அனைவரும் கேட்பீர்!

இதுவும் அதே 'Fetna' தமிழ் விழா சம்பந்தப்பட்ட சமாசாரம்தான்! விழாவையொட்டி ஒரு சிறப்பு மலர் வெளியிடப்பட்டது. கனடியத் தமிழரின் ஒரு டசின் கட்டுரைகளும் இதிலுள்ளன.

இதற்கான அட்டையை ஐரோப்பாவில் வசிக்கும் பிரபல ஓவியக்கலைஞர் ஒருவர் வரைந்திருந்தார். எல்லோரும் அங்கீகரித்து மலர் அச்சுக்குப்போகும் தறுவாயில், ஓரிரு புத்திஜீவிகள் தலையிட்டு, மற்றையோருக்குத் தெரியாமல் அட்டையில் மாற்றம் செய்துவிட்டனர்.

விழாவின் தொனிப்பொருளான கனியன் பூங்குன்றனாரின் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பதை அடியொற்றி வரையப்பட்ட ஓவியம் மாற்றப்பட்டு, பதிலாக தவிலும் நாதஸ்வரமும் அங்கு அநாதைகளாகக் காணப்படுகின்றன.

இரண்டு வாத்தியக் கருவிகள்தான் 'யாதும் ஊரே....." என்று விழாக்காரர்கள் நினைத்து விட்டனர் போலும்!

## கனிமொழியின் நன்றியால் சோனியா கனிந்தாலும்......

ஈழத்தமிழர் 2009ல் கொத்துக் கொத்தாக கொலை செய்யப்பட்டபோது, சோனியாவிடம் உதவிக்கரம் நீட்டாத மு. கருணாநிதி, கனிமொழியை எம். பியாக்க கால்பணிந்து கைபிடித்து, ஒருவாறு வென்றுவிட்டார்.

சும்மா சொல்லக்கூடாது, இது அபார சாதனைதான். வெற்றி பெற்ற மறுநாளே கனிமொழி புதுடில்லி பறந்துசென்று சோனியாவை நேரில் சந்தித்து நன்றி சொல்ல, அவர் கனிந்து போனாராம்.

ஆனாலும், கனிமொழி மீதான வழக்கு, தயாளு அம்மாளை நீதிமன்றப் படியில் ஏற்றுவது போன்ற விடயங்களில் சோனியா கனிவு காட்டுவதாக இல்லாதது கருணாநிதிக்குப் பெரும் கவலையாகவே உள்ளது.

இப்போது தம்மைச் சந்திக்கும் ஒவ்வொருவரிடமும் இவைகளையே சொல்லிச் சொல்லி புலம்பிக் கொண்டிருக்கிறாராம் கருணாநிதி. மனைவியின் வழக்கும், துணைவியின் மகள் மீதான வழக்கும் சேர்ந்து அவரின் நிம்மதியைக் கொலை செய்து வருகின்றன. பாவம் இந்த வயதில்...!

## ஒரு பிச்சைக்காரரின் பெறுமதி ஒன்றரை லட்சம் ரூபா

இதுவும் ஒரு பிச்சைக்காரரின் கதைதான்.

தமிழ்நாட்டின் விழுப்புரம் மாவட்டத்தின் கண்டமங்கலம் கிராமத்தில் 80 வயதான முதியவர் ஒருவர் பிச்சையெடுத்து வாழ்ந்து வந்தார். திடீரென அவர் இறந்துவிட, ஊராட்சி மன்றத்தினர் வந்து அடக்க ஏற்பாடுகளைச் செய்ய முனைந்த வேளை, பாரமான ஒரு பை அவர்கள் கண்களில் பட்டது.

அதனுள்ளே ஐநூறு மற்றும் ஆயிரம் ரூபா நோட்டுகளாக ஒரு லட்சத்து 42 ஆயிரம் ரூபாக்கள் காணப்பட்டன. அத்துடன் ஒரு 'செல் போனும்' உள்ளே காணப்பட்டது.

அரசாங்க செலவில் அவரது சடலம் அடக்கம் செய்யப்பட்டது. அவரது பணமும் ஊள்ளூராட்சிச் சபைக்குச் சொந்தமானது. முதியவர் மரணமாகி ஒரு வாரத்தின் பின்னர் அவரது பிள்ளைகள் மருமக்கள் என்று செல்லி அரை டசின் பேர் அவரின் பணத்துக்கு உரிமை கோரி நீதிமன்றம் சென்றுள்ளனர். ஆனால் சடலத்துக்கு உரிமை கோரவில்லை (நன்றி: தினமணி)

## காவல் நிலையத்தில் நடந்த எச்சில் சண்டை

பணப்பிரச்சனை காரணமாக காவல் நிலையத்துக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்ட இருவர், அதிகாரி முன்னிலையில் எச்சில் சண்டை நடத்தி ஒரு சாதனை புரிந்துள்ளனர்.

இலங்கையில் பண்டாரகம காவல் நிலையத்தில் இது நடைபெற்றது. இரண்டு பேரையும் சமாதானப்படுத்தும் நோக்கில் காவல் நிலையத்துக்கு அழைத்த அதிகாரி கருணரத்னாவுக்கு, எச்சில் சண்டை தர்மசங்கட நிலைமையை ஏற்படுத்திவிட்டது. எச்சில் சண்டை புரிந்த இருவரும் யார் தெரியுமா? அம்மாவும் மகளுமான இருவரே. (நன்றி: தமிழ் மிறர்)

**உதாசனன் உலா விருந்து**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Diaspora Youth Release Policy Document to Chart course of Struggle Post-Mulliaykkaal

**Findings towards a Formation of Policy**

A solution for the Eelam Tamil nation within a Sri Lankan unitary state is unfeasible. While Mullivaaikkaal saw one of the worst mass atrocities in the history of the Eelam Tamil nation, it is important to note that it was a flashpoint in the process of protracted genocide against the Tamils that began ever since British departure from the island of Ceylon, and that structural genocide continues at an accelerated pace in the occupied homeland of the Eelam Tamils post-Mullivaaikkaal.

Given this background, it is only politically practical and ethical for representatives and activists of the Eelam Tamil nation to not accept any political solution that confers legitimacy to the unitary state of Sri Lanka.

Tamil sovereignty is the basis of a principled minimal demand of the Eelam Tamil nation. Tamil sovereignty is based on the recognition of Historical Sovereignty that the Eelam Tamils as a nation had in their traditional homeland, Earned Sovereignty that the LTTE de-facto state won in the course of the armed struggle, and Remedial Sovereignty to protect the Eelam Tamil nation from genocide in the post-Mullivaaikkaal period. A 'step-by-step' approach that undermines Tamil sovereignty, solutions based on the 13th Amendment, devolution, internal self-determination have failed to meet the fundamental political aspirations of the Tamil nation. In this regard, both the Indo-Sri Lanka accord framed by India in 1987 and the December 2002 Oslo Declaration created under the supervision of the US moderated co-chairs negate the aspirations of the Eelam Tamil nation.

Whereas, a framework for a just political solution for the Eelam Tamils was laid in the 1985 Thimpu Talks and in the 2003 Interim Self-Governing Authority proposals charted by the LTTE governed defacto state that was based on the recognition of sovereign Eelam Tamil nationhood.

The school of thought of the Eelam Tamils' liberation struggle is uncompromising on a solution based on a Tamil sovereign nationhood.

The political outlook of V. Navaratnam, S.J.V.Chelvanayagam and V. Pirapaharan which constitutes the school of thought of the Eelam Tamils'liberation struggle forms the general ideological framework of Eelam Tamil nationalism and calls for asolution based on the recognition of the Eelam Tamils as a nation as different from a minority-community. This school of thought was the guiding principle behind the Vaddukkodai resolution mandated by the Eelam Tamils in the homeland in 1977, re-mandated by the Tamil diaspora throughpolls in 2010, and also behind the de-facto state functioning of LTTE. This school of thought providesa basis towards the creation of a secular, egalitarian Tamil society and also engaging constructively with the aspirations of the Muslim peoples.

Tamils must take note of their significant role in local and global geopolitics.
More than Tamils needing the West and India, these powers need the Tamils in their policy concerning the South Asian region. In terms of numbers, the Tamil Nadu Tamils and the Eelam Tamils taken together constitute a formidable bloc that forms the calculations of world powers. Taking this into account, Eelam Tamils should not be pawns of an external power's policy but must have a very clear understanding of their policy towards the resolution of their chronic national question. The recent Tamil Nadu student uprising against the pro-LLRC US resolution in 22nd Session of the UNHRC in 2013 which compelled the Tamil Nadu state government to pass a resolution calling for a referendum among the Eelam Tamils is an example of how people's power can effectively challenge the policy of world powers. In such a situation, an enlightened political activism in the sphere of media and information is necessary.

There must be a critical engagement with the International Community.
It is unfortunate that some actors within the Tamil polity are willing to accept solutions thrust upon us by the International Community that have only reforming the Sri Lankan state or bringing about a regime change at mind. This sort of uncritical engagement has led to political failures among certain Tamil activists and organizations in venues like UNHRC, where-in they stand approving of resolutions recognizing the legitimacy of the unitary Sri Lankan state. The engagement with external actors and world powers must be critical, in that Eelam Tamils must be equal partners while placing our principled demands at the table. The International Community and the UN failed to invoke the Responsibility to Protect (R2P) in 2009 to save the Eelam Tamils from a blood bath in May, preferring instead to protect the Sri Lankan state. A genuine political gesture by the International Community towards the Eelam Tamil nation in the current period of structural genocide in our homeland would be the recognition of our right to Remedial Sovereignty.

Strategies must be framed by measuring outcomes.
Taking the political and social factors in the Tamil homeland, Tamil Nadu and the Tamil diaspora into account, and the interests of local and global powers in the island into consideration it is necessary to critically assess what would be the outcome of particular courses of action in the long-run. Concomitantly, a long-term strategy based on the principled political position of the Eelam Tamils' liberation struggle must be framed. Given the current situation, it is not enough to call for an independent international investigation into the crimes committed by the Sri Lankan state. Taking from the mass uprising in Tamil Nadu and the results they have produced, the ( Contd. .. Page 33)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரா. சம்பந்தன்

# நாசாவும் திருநள்ளாறும்!

இந்தச் செய்தியை முகநூல் பதிவு ஒன்றில் காண முடிந்தது. ஆனால் அந்தச் செய்தியின் கனமும் அந்தக் கனத்தின் மூலம் ஏற்படும் ஆச்சரியமும் இந்துக்களாகப் பிறந்த அனைவருமே எம் முன்னோர்கள் சொன்னவையும் செய்தவையும் வெறும் சம்பிரதாய கடமைப்பாடுகள் அல்ல என்பதைத் திட்டவட்டமாக உணர்ந்து கொள்ளக் கூடியதாக இருப்பதால் அப்படியே பகிர்ந்து கொள்கின்றோம்'

சில வருடங்களுக்கு முன்பு அமெரிக்கா செயற்கைகோள் ஒன்று பூமியின் குறிப்பிட்ட பகுதியை கடக்கும் போது மட்டும் 3 வினாடிகள் ஸ்தம்பித்துவிடுகிறது. 3 வினாடிகளுக்கு பிறகு வழக்கம்போல் வானில் பறக்க ஆரம்பித்து விடுகிறது. எந்தவித பழுதும் அதன் செயற்கைகோளில் அதன் கருவிகளில் ஏற்பட்டு இருக்கவில்லை'

இந்த சம்பவம் நாசாவிற்கு அதிர்ச்சி கலந்த ஆச்சரியத்தை அளித்தது. இது எப்படி சாத்தியம் என்பதை அவர்கள் சந்தடி இன்றி ஆய்வு செய்தார்கள்' ஆராய்ந்து கிடைத்த முடிவு நாசாவை மட்டுமல்ல உலகையே மிரள வைத்தது.

ஆம்' எந்த ஒரு செயற்கைகோளும் பூமியில் இந்தியாவின்-தமிழ்நாடு அருகில் உள்ள புதுச்சேரி-திருநள்ளாறு சிறீ தர்ப்பாரண்யேசுவரர் கோவிலுக்கு மேல் நேர் உள்ள வான்பகுதியை கடக்கும் 3 வினாடிகள் மட்டும் ஸ்தம்பித்துவிடுகின்றன என்று நாசா விஞ்ஞானிகள் கண்டு கொண்டார்கள்'

அப்படி நிகழ்வதற்கு என்ன காரணம் என்று அந்த வான் பகுதியையும் நிலப் பகுதியையும் ஆராய்ந்தார்கள்'

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வினாடியும் கண்ணுக்கு தெரியாத கருநீலக்கதிர்கள் அந்த கோவிலின் மீது விழுந்துகொண்டே இருக்கிறன்றன என்ற உண்மை அவர்களைத் திகைக்க வைத்தது' அதற்கும் மேலாக இரண்டரை வருடங்களுக்கு ஒரு முறை நடக்கும் சனிப்பெயர்ச்சியின் போது இந்த கருநீலக்கதிர்களின் அடர்த்தி மிகவும் அதிகமாக இருந்ததையும் அவர்கள் கண்டு பிடித்தார்கள்'

விண்வெளியில் சுற்றிக் கொண்டிருக்கும் செயற்கைக்கோள்கள் இந்த கருநீலக்கதிர்கள் பாயும் பகுதிக்குள் நுழையும்போதும், வெளியேறும் போதும் மிகவும் சிரமப்பட்டு ஸ்தம்பித்துத் தப்பி விடுகின்றன. அதே நேரத்தில் செயற்கைக் கோள்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படுவதில்லை.

இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால் இந்தக் கோவில்தான் இந்துக்களால் 'சனிபகவான்' தலம் என்று போற்றப்படுகிறது. இந்த சம்பவத்திற்கு பிறகு நாசாவிலிருந்து பல முறை திருநள்ளாறு வந்து ஆராய்ச்சி செய்து விட்டனர். மனிதனை மீறிய சக்தி உண்டு என்பதை உணர்ந்தனர். அவர்களும் சனிபகவானை ஆச்சரியத்தோடு பார்த்தனர். இன்று வரை விண்ணில் செயற்கைகோள்கள் திருநள்ளாறு பகுதியை கடக்கும் போது ஸ்தம்பித்து கொண்டே இருக்கிறது.

இந்தச் செய்தியைக் கேட்டு பிரமிக்காதவர்கள் நம்முடைய முன்னோர்களை நினைத்து கட்டாயம் பிரமிக்கவேண்டும். நாம் பல செயற்கைக்கோள்கள் கொண்டு கண்டறியும் சனிக்கோளின் கதிர்வீச்சு விழும் பகுதியை கண்டு பிடித்து அதற்கென ஒரு கோயிலையும் கட்டி கதிர்வீச்சுகள் அதில் விழும் நாட்களையும் கணக்கிட்டு அதற்கான நாளை சனிபெயர்ச்சி என்று அறிவித்த திறமை நம்மால் நினைத்துக்கூட பார்க்க முடியாத ஒன்றாகும்'

உலகம் எங்கும் இருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட அறிவு சார்ந்த விஞ்ஞானிகள் கூட்டம்' அவர்களுக்குக் கோடிக் கணக்காக பணம் கொடுக்கும் அரசுகள்' இனிக் கம்பியூட்டர் வசதிகள் என்று எல்லாம் நிறைந்த வானியல் சமூக நெறியாளர்களுக்கே கற்றுக் கொடுக்கும் வித்தையை நவக்கிரக விக்கிரகங்களிலேயே எம் முன்னோர்கள் தெரிவித்து விட்டு மறைந்து போனார்கள்'

நாம் ஏதாவது கோவிலுக்குச் சென்றால் அங்கே நவக்கிரகங்களை நன்றாகக் கவனிக்க வேண்டும்' அந்த சிலைகளின்மேல் கட்டப்பட்டுள்ள துணிகளையும் நன்றாக நிதானித்துப் பார்க்க வேண்டும்' அந்தத் துணிகள் பல்வேறு நிறங்களிலே வேறு வேறாக ஒன்பது கிரகங்களுக்கும் கட்டப்பட்டிருக்கும்'

இவை எல்லாம் வெறும் அழகிற்காகக் கட்டப்பட்ட பட்டுத் துண்டுகள் அல்ல' எந்த எந்தக் கிரகங்கள் விண்ணிலே எந்த எந்த நிறத்தில் இருக்குமோ அந்த அந்த நிறத்திலே தான் அந்தத் துணிகள் கட்டப்பட்டு இருக்கும்' கிரகங்களின் நிறங்களை எம் முன்னோர் எப்படிக் கண்டு பிடித்தார்கள் என்பதற்கு நாசாவிடம் விடை இல்லை'

கோவில்களிலே கும்பங்கள் வைக்கும் குடத்தில் சுற்றப்பட்டிருக்கும் நூலின் ஓட்டத்தைப் போலவே அணுக்கதிர்கள் கிரகங்களைச் சுற்றி இருக்கின்றன' ஒரு அன்ரனா ஒலியைக் கடத்தவும் வாங்கவும் உதவுவது போல மாவிலையாலும் செய்தியைக் கடத்த முடியும் என்கின்றார்கள் இன்றைய விஞ்ஞானிகள்.

நவ தானியங்களின் கோதுகள், இடியையும் மின்னலையும் ஒன்றும் இல்லாமல் செய்யும் ஆற்றல் படைத்தவை என்பதால்தான் உயரமான கோபுரக் கலசங்களிலும் அத்திவாரத்திலும் அவற்றையும் வைத்து கட்டடங்களை எழுப்பினார்கள் இந்துக்கள் என்கின்றார்கள் இன்றைய ஆராய்சியாளர்கள்'

இவ்வாறு எம் முன்னோர்களின் ஒவ்வொரு அசைவுக்கும் காரணம் சொல்லிக் கொண்டு போகின்றது இன்றைய விஞ்ஞான உலகம்' ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனடா மூர்த்தி

# கண்டதைச் சொல்கிறேன் 5

என் சினேகிதி ஒருத்தி 'பேஸ்புக்கும், என்ரை வீட்டுக் குளிர்சாதனப் பெட்டியும் ஒன்றுதான்..." என்றாள். 'ஏன்?" என்றேன். 'சமையலறைக்குப் போகும்போதெல்லாம், குளிர்சாதனப் பெட்டியின் கதவை ஒரு முறை திறந்து பார்த்துவிட்டுப் போவோமே... அதுபோலத்தான்... எனக்கும் ஒரு முறை பேஸ்புக்கை திறந்து மூடாவிட்டால் பத்தியமாகாது" என்றாள். 'ஐ லைக் இட்" என்றேன் நான். ஆம். முகப்புத்தகத்தில் இருப்பவர்களுக்குத்தான் இந்த 'லைக்' என்றால் என்னவென்று நன்கு தெரியும்.

முகப்புத்தகத்தில் நாம் இடும் குறிப்போ அல்லது படமோ நண்பர்களால் விரும்பப்படுமாயின் அதற்கு அவர்கள் 'லைக்' என்ற பொத்தானைச் சுட்டலாம் என்பது முகப்புத்தக விதி. அப்பேர்ப்பட்ட இந்த 'லைக்' போடும் சலுகை இன்று ஒரு அங்கீகார அளவீடாகவே வந்து விட்டது. உதாரணத்திற்கு அமெரிக்காவின் ஸ்டேட் டிப்பார்ட்மென்ட் (ராஜாங்க இலாகா) தன் முகப்புத்தகப் பக்கங்களில் வரும் விடயங்களுக்கு பொதுமக்களிடமிருந்து கிடைக்கும் 'லைக்' தொகையை அதிகரிக்க 2011க்கும் மார்ச் 2013க்கும் இடையே சுமார் 630,000 டாலர் வரை விளம்பரச் செலவு செய்திருப்பதாக செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கிறது. (முகப்புத்தகத்தினூடாக மக்களை தொடர்புகொள்ள மட்டும் ஸ்டேட் டிபார்ட்மென்ட் வருடாந்தம் தனியாக 36,000 டாலர்வரை செலவு செய்கிறார்களாம்.) அடேயப்பா....

அமெரிக்க ராஜாங்க இலாகா அளவுக்கு நாம் இல்லைத்தான். ஏதோ நம்மாலான விதமாக நம் விருப்புகளுக்கு ஒரு ஒப்புதலாகத்தான் 'லைக்'கை உபயோகிக்கிறோம். ஆனால் இந்த 'லைக்' ஒப்புதலை செய்வதில்கூட நம்மிடையே ஒரு 'முகநூல்த்தமிழ்நுண்அரசியல்" இருக்கிறது என்றால் அது உங்களில் சிலருக்கு வேடிக்கையாகத் தோன்றக்கூடும். அப்படி நான் கண்டதைச் சொல்லுகிறேன்... இதையும் ஒரு வேடிக்கையான அவதானமாக எடுத்துக் கொள்ளுங்கள்.

முகப்புத்தகத்தில் இருக்கும் நம்மவர்களில் ஒருசிலர் எல்லாப் பதிவுகளையும் வரிக்கு வரி படிப்பார்கள். ஆனால் எதற்கும் 'லைக்' போட மாட்டார்கள். அந்தப் பதிவு பிடித்திருந்தாலும்- அது குறித்த சிலாகிப்பு மனதில் இருப்பினும்கூட 'லைக்' போடுவது என்பது அவர்களைப் பொறுத்தவரை ஒரு அனாவசியமான விடயம். அவர்கள் அப்படி இருக்க, இன்னுமொரு ரகத்தினர் 'லைக்' இடுவது என்பது தாம் தருகின்ற ஒரு வகையான 'அங்கீகாரம்" என்றே கருதிக்கொள்வார்கள். எனவே தான் பார்த்த பதிவுக்கு அங்கீகாரம் தரக்கூடாது என்பதற்காகவே 'லைக்' பட்டனைத் தட்ட மாட்டார்கள்.

இன்னொரு வகையினர் ஆள்பார்த்து 'லைக்' தருவது என்ற கொள்கை கொண்டவர்கள். தமக்குப் பிடித்தவர்களின் பதிவைப் பார்த்தாலே உடனே கண்ணை மூடிக் கொண்டு அதற்கு 'லைக்' போட்டு தனது சொலிடாரிட்டியை மற்றவருக்குக் காட்டி நிற்பார்கள். ஒரு நான்கு நிமிட நேரப்பரிமாண யுட்டியூப் வீடியோவைப் பகிர்ந்தாலும் நாலு செக்கனுக்குள் டுப் என்று அதற்கு 'லைக்' கிடைத்துவிடும். 'லைக்' போடுவது என்பது இந்த ரகத்தினரைப் பொறுத்தவரை ஒருவித பெர்ஸனலைட் விவகாரம்.

பெண்கள் எதைப் பகிர்ந்தாலும் அவர்களுக்கு அதிக 'லைக்' கிடைப்பதாகவும் ஒரு குமுறல் முகப்புத்தக உலகத்தில் பலரிடம் இருக்கத்தான் செய்கிறது. அன்பே சிவம் என்ற காலம் போய் இப்போ அன்பே 'லைக்'.. அதனால்தானோ என்னவோ ஒரு சிலர் ஒருபடி மேலே போய் 'லைக்'கை எதற்குத்தான் போடுவது விடுவது என்ற விவஸ்தையற்று மரண அறிவித்தலுக்கும் உணர்ச்சி வசப்பட்டு 'லைக்' போட்டுவிடுவார்கள்.

அதுபோக முகப்புத்தகத்திலிருக்கும் நமக்கு இன்னுமொரு வகை 'லைக்' பிரச்சினையும் உண்டு. நண்பர்களில் சிலர் தாங்கள் பதிவிடும் குறிப்புக்களை நாம் காணவேண்டும் என்பதற்காகவே நம் முகப்புத்தகத்தில் அவற்றைப் போட்டுவிடுவார்கள். நம்ம முற்றத்தில் அவர்களின் பதிவு கிடந்தால் நாம் என்னதான் செய்வது? பிடிக்கிறதோ பிடிக்கவில்லையோ அதை 'லைக்' பண்ணியே தீர விடவேண்டிய இக்கட்டான சூழ்நிலை நமக்கு வந்துவிடும். விளைவு? பிடி 'லைக்'!

'லைக்' ஒரு பூதமும்கூட, எனவே அதைக் கவனமாகக் கையாளவும் வேண்டும். முகப்புத்தகத்தில் புரட்சிகர கருத்தை ஒருவர் சொல்லி அவருக்கு அதிக 'லைக்'குக்கள் கிடைத்திடுமானால் நாளடைவில் அவர் அவ்வாறாக கருத்துக்களை சொல்லிச் சொல்லியே முகப்புத்தக உலகில் ஒரு புரட்சியாளராகவே மாறிவிடுகிறார். அதாவது 'முகநூல் புரட்சியாளர்கள் பிறப்பதில்லை... உருவாக்கப்படுகிறார்கள்."

இப்படியாக 'லைக்' மகத்துவம்பற்றித் தெரிந்த நான் ஒருமுறை கோத்தபாய ராஜபக்சே அவர்களின் சில பொன்மொழி-களை முகப்புத்தகத்தில் பகிர்ந்திருந்தேன். நான் பகிர்ந்திருந்த அவரது பொன்மொழிகளில் அற்புதமான மூன்றை மட்டும் கீழே தந்திருக்கிறேன். படித்துப்பாருங்கள்.

பொன்மொழி1: 'யுத்த சூழ்நிலை மட்டும் ஏற்படவில்லை என்றால் 78 வீதமான இருக்கும் பெரும்பான்மை சமூகத்தினர் வடக்கிலும் கிழக்கிலும் அதே விகிதா-சாரத்திலேயே இருந்திருக்க வேண்டும். அதைவிட்டு வட, கிழக்கு நிலப்பரப்பில் தமிழர்கள் மட்டும் 98 வீதமாக இருப்பது என்ன நியாயம்?"

பொன்மொழி2: 'சிறுபான்மையினர் சிறுசிறு பிரச்சனைகளை தூக்கிப்பிடிப்பதால் பெரும்பான்மையினரிடையே சந்தேகம் ஏற்படக் காரணமாகிறது. அதனால் பெரும்பான்மை சமூகத்தால் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் சமாதானம் குலையக் காரணமாகின்றன. இங்குதான் இனப்பிரச்சனை தலைதூக்குகிறது."

பொன்மொழி3: 'இந்தியாவும், இலங்கையும் இருவேறு நாடுகள். நமது பிரச்சனை நம் நாட்டுக்கு மட்டுமே உரியது. நாமே அதற்குத் தீர்வுகாண வேண்டும்."

சோகம் என்னவென்றால் நான் பகிர்ந்த கோத்தா பொன்மொழிப் பகிர்வை இதுவரை யாரும் 'லைக்' செய்யவில்லை. அதையிட்டு எனக்கு உண்மையில் மிகவும் சந்தோசமாக இருந்தது'●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குயின்ரஸ் துரைசிங்கம்

# குடியுரிமை பெற்ற 2 எல்லோரும் கனடியரா?

கனடிய குடியுரிமை மட்டுமே எம்மைக் கனடியர்கள் ஆக்கிவிடாது, கனடிய நாட்டின் பண்பும் நாகரிகமும் பண்பாடும் எம்மிலும் வரும்வரை, நாம் கனடியர்கள் ஆகிவிட முடியாது என்பதை, கடந்தவார இதழில் விவாதித்தோம்.

அப்படி என்ன அது கனடிய நாகரிகம்? இங்கே என்ன அப்படி வாழ்கிறது? திருமணமாகாமல் குடித்தனம் நடத்துவதும், மிக இளவயதில் குழந்தை பெற்று அல்லாடுவதும், பல தடவை மணம் முடித்து, பல தடவை விவாகரத்துக் கோருவதும், இளவயதிலேயே பிள்ளைகளை வீட்டைவிட்டுக் கலைப்பதும் என்று, இந்த நாட்டில் ஏகப்பட்ட குழப்பங்கள். இங்கே என்ன பண்பும் நாகரிகமும் பண்பாடும் மீதமிருக்கிறது என்று நீங்கள் முணுமுணுப்பது புரிகிறது.

எந்த நாட்டிலும், நன்மைகளுடன் பல பாதகமான விடயங்களும் இருக்கவே செய்கின்றன. கனடா ஒன்றும் அதற்கு விதிவிலக்கானதல்ல. இருப்பினும், மிகச் சிறிய விகிதத்தில் இந்த நாட்டில் காணப்படக்கூடிய இந்த சமூகப் பிரச்சனைகளை நாம் புறந்தள்ளி, எமக்குப் பல விதத்திலும் நன்மை தரக்கூடிய பல சாதகமான விடயங்களை அலசிப்பார்ப்பதும், அறிந்து கொள்வதும், பழக்கத்தில் கொண்டுவருவதும், அந்த நாட்டின் குடிமக்களாக எம்மை நாம் மாற்றிக்கொள்வதற்கு மிகவும் அவசியம்.

## சுயநலம்

இந்த நாட்டவரிடம் நாம் பழகிக்கொள்ள வேண்டிய மிகப் பெரிய பாடம்: பொதுநலம். நானும் என் குடும்பமும் மட்டுமல்ல, என் அயலவர், எனது சமூகத்தவர், எனது நாட்டவர் என எல்லோரும் நன்றாய் வாழ வேண்டுமென்ற பொதுநலமும் பெருந்தன்மையும் இந்த நாட்டவருக்கு இயல்பாகவே இருக்கின்ற ஒரு பண்பு. நன்றி சொல்கின்ற பண்பாக இருந்தாலும், மன்னிப்புக் கேட்க வேண்டியிருந்தால், உடனடியாகவே sorry சொல்லி, தயவுசெய்து அதைப் பெரிது படுத்த வேண்டாம் என்று நேரடியாகவே கேட்டுவிடுகின்ற பெருந்தன்மை, நாம் அவசியம் படித்துக்கொள்ள வேண்டிய, எம்மைப் பயிற்றுவித்துக் கொள்ள வேண்டிய ஒரு பண்பு. பேரூந்தில் அல்லது புகையிரதத்தில் பயணிக்கும் போது அல்லது வீதியில் நடக்கும்போது, தற்செயலாக யாரையும் இடித்து விடுவோம் அல்லது எமது குழந்தைகளோ நாம் கையில் வைத்திருக்கும் பொருட்களோ அடுத்தவருக்கு தொந்தரவாக அமைந்து விடலாம். இருப்பினும் நாம் அதைப் பொருட்படுத்தத் தயாரில்லை. தற்செயலாக அவர்களிடம் மன்னிப்புக் கேட்பதோ, தவறுக்கு வருந்துவதோகூட, ஏதோ எமது சுயகௌரத்திற்கு இழுக்கை ஏற்படுத்திவிடுவதாக நாம் எடுத்துக் கொள்கிறோம். தேவைப்பட்டால், பாதிக்கப்பட்ட அந்த நபரின்மீதே மேலதிக குற்றச்சாட்டையும் சுமத்தி, என் பிள்ளை சின்னப்பிள்ளை - உனக்கு இடித்திருந்தால் என்ன என்று சண்டைக்கும் போகிறோம். நான் நடக்கும்போது எதிரே வரும் அத்தனை பேரும் விலகி இடம்கொடுப்பது அவசியம், அப்படி விலகிக்கொள்ளாவிடில் என் குரலை உயர்த்தி சண்டைபோட நான் தயார். ஆனால், அப்படி விலகி இடம்தருகின்ற அந்த நல்லவர்களுக்கு நன்றி சொல்ல என் சுயகௌரவம் இடம் தருவதாக இல்லை. ஏன் நன்றி சொல்ல வேண்டும், விலகி இடம்விடுவது சாதாரண விடயம் என்று வாதம் வேறு செய்கிறோம்.

நாம் சமூகப் பிராணிகள் என்பதை மறந்து விடுகிறோம். சிறிய ஒரு நன்றி அல்லது மன்னிப்பு, எமக்கு மட்டுமல்ல, எமது குடும்பத்தினர், சமூகம், எமது நாட்டவர் அனைவருக்கும் பெருமை தரும் விடயம் என்பதை ஒட்டுமொத்தமாய் மறந்து போகிறோம். தொடர்மாடிக் கட்டடங்களில் இயங்குகின்ற மின்-உயர்த்திகளில் (Elevator) நாம் பயணிக்கும்போது, அவை அனைவருக்கும் பொதுவானவை, அனைவரும் ஒன்றால் ஒத்துழைத்துப் பயணிக்க வேண்டுமென்பதை ஒட்டுமொத்தமாய் மறந்து போகிறோம். எனக்குப் பின்னே இன்னும் சிலர் வந்துகொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்திருந்தும், அவசர அவசரமாக அழுத்தியை (button) அமுக்கி, நான் மட்டும் அல்லது எனது குடும்பம் மட்டும் பயணித்தால் போதும் என்று சுயநலமாய் ஓடித்திரிகிறேன். இந்த நாட்டவர் மின்-உயர்த்திகளுக்குள் சென்றால், பின்னே வருபவர்கள் வந்து சேரும்வரை, அதைத் திறந்து வைத்தபடி காத்திருப்பார்கள். அவர்கள் மிக அவசரம் செல்ல வேண்டியிருந்தாலும்கூட, அந்த ஓரிரு நிமிடங்களை சுயநலத்துடன் தங்கள் தேவைக்குப் பாவிக்க முயற்சிக்க மாட்டார்கள். தமிழர்கள் நாம் வித்தியாசமாகவே பழக்கப்பட்டிருக்கிறோம். நான் போக வேண்டும், மற்றவரெல்லாம் அடுத்த மின்-உயர்த்தியில் வரட்டும் என்று, சுயநலத்துடன் நினைத்து செயற்படுகிறேன். அப்படி யாராவது மின்-உயர்த்தியை எமக்காகத் திறந்து வைத்திருந்தாலும், நாம் உள்ளே நுழைந்ததும், அவர்களுக்கு நன்றி சொன்னால் எமது சுயகௌரவம் குறைந்துவிடுவதாக நினைத்து, வேறு எங்காவது விறைத்துப் பார்த்தபடி போய் விடுகிறேன்.

வீதியிலே வாகனம் ஓட்டிச் செல்லும்போது, என்னைப் போன்று அடுத்தவருக்கும் அவசரம் இருக்கலாம் என்பதை மறந்து, அவர்களுடனெல்லாம் அவசியமற்ற சண்டைகளை உருவாக்கி, நானும் எனது உலகமும் மட்டுமே வாழ்ந்து நலம்பெற்றால் போதும் என்று சுயநலமாய் வாழ்கிறேன். பக்கத்து வீட்டுக்காரன் காலை வணக்கம் சொல்கிறார், ஆனால் நான் காதில்கூட வாங்கிக் கொள்ளாமல் போய் விடுகிறேன். கண்டவனுக்கெல்லாம் எதற்கு நாம் ஹலோ சொல்ல வேண்டுமென்ற வியாக்கியானம் வேறு. பல தடவை, பல விடயங்களில் பக்கத்து வீட்டுக்காரர்களும் அயலவர்களும் அனுசரித்துப் போவதற்கும், எமது பிள்ளைகள் விடயத்தில் பழகிக்கொண்டு ஒருவருக்கொருவர் புரிதலுடன் வாழவும் சில சமிக்ஞைகளைக் காட்டினாலும், அதைப் புரிந்தும் புரியாததுபோன்று, என் கடும்போக்கைத் தளர்த்திக் கொள்வதால் என்னை இளக்காரமாக நினைத்து விடுவார்கள் என்று எண்ணிக்கொண்டு, என்னைச்சுற்றி நடப்பவற்றை எள்ளளவும் புரிந்துகொள்ள மனமின்றி, சுயநலமுள்ள மிருக உணர்வுடன் நான் நடந்து கொள்கிறேன்.

ரோமியில் வாழ்ந்தால், ஒரு ரோமனாக வாழ் என்ற பழமொழி எமக்கும் பொருந்தும். கனடிய நாட்டுப் பிரஜையாக வாழ வேண்டுமென்றால், கனடியர்களிட-முள்ள நல்ல பழக்கங்களையும் உணர்ந்து ஏற்றுக்கொண்டு சமூகப்பிராணிகளாக வாழப் பழகிக் கொள்வோம். எம்மைப் பார்த்து, எமது பிள்ளைகள் பெருமைப் படுவார்கள்.

நேரம் தவறுவது குறித்து அடுத்த மாதம் பார்க்கலாம்!●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிருத்த நிறைஞர் பட்டதாரிகள் அமைப்பின் 'கனவுகள்'



நிருத்த நிறைஞர் பட்டதாரிகள் அமைப்பு ஐந்தாவது ஆண்டாக நடத்திய 'கனவுகள்' நாட்டிய விழா கடந்த மாதம் ஏழாம் திகதி பிற்பகல் யோர்க்வூட்ஸ் நூலக அரங்கில் நடைபெற்றது. கனடா கலை மன்றத்தில் பரதம் கற்று பட்டதாரிகளாக வெளியேறியவர்களால் நடத்தப்படும் சந்திரசேகர நடன அகடமி, சத்விக நடன-சங்கீத அகடமி, சிந்து கலைமன்றம், கலை கார்மிலாலயம், நிருத்தியலை நடன அகடமி ஆகியவற்றின் சுமார் ஐம்பது பிள்ளைகள் இங்கு நிகழ்ச்சிகளை வழங்கினர். நிருத்த நிறைஞர் பட்டதாரிகள் இணைந்து வழங்கிய சூழல் சுற்றாடலை மையப்படுத்திய 'பூமி' மற்றும் தசாவதாரம் நாட்டியங்கள் விழாவின் மகுடங்களாக அமைந்தன. தமிழர் தகவல் முதன்மை ஆசிரியர் திரு எஸ். திருச்செல்வம் தொடக்கவுரை நிகழ்த்தினார். மார்க்கம் நகரசபை உறுப்பினர் லோகன் கணபதி மற்றும் கவிஞர் வி. கந்தவனம் ஆகியோர் விருந்தினர் உரைகள் நிகழ்த்தினர். கலைமன்ற அதிபர் நிறைஞ்சனா சந்துருவின் குறிப்புரையையடுத்து, விழாவின் சேர்க்கப்பட்ட இரண்டாயிரம் டொலர்கள் ரொறன்ரோ சிறார் வைத்தியசாலையின் மனநலப் பிரிவுக்கு வழங்கப்பட்டது.

(ஒளிப்படங்கள்: கண்ணன் டிஜிற்றல் ஸ்ரூடியோ)

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லஷ்மி சிவனேஸ்வரலிங்கத்தின் பரதநாட்டிய அரங்கேற்றம்

சதங்கை நர்த்தனாலய மாணவி லஷ்மி சிவனேஸ்வரலிங்கத்தின் பரத நாட்டிய அரங்கேற்றம் கடந்த மாதம் 14ஆம் திகதி ஸ்காபரோ சீன கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. பல்துறை இளங்கலைஞரான லஷ்மி ரொறன்ரோ பல்கலைக் கழகத்தில் நடனத்துறையில் பட்டக்கல்வியை மேற்கொண்டு வருகிறார். ரசிகர்களால் மண்டபம் நிறைந்திருந்த அரங்கேற்ற நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினராக 'தக தினி த' நடன அகடமியின் அதிபர் திருமதி அபிராமி றொஷான் பங்குபற்றி அழகான உரைநிகழ்த்தினார். மார்க்கம் நகரசபை உறுப்பினர் லோகன் கணபதி மற்றும் ஒன்ராறியோ என். டி. பி தலைவர் நீதன் ஷண் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர். பிரபல நடனக் கலைஞரும் பேராசிரியருமான சுதர்ஷன் துரையப்பா மேடை நெறியாளராகப் பங்கேற்று, சரளமான தமிழ்-ஆங்கில இருமொழிப் புலமை வாயிலாக நிகழ்வுக்கு மெருகூட்டினார். (ஒளிப்படங்கள்: கண்ணன் டிஜிற்றல் ஸ்ருடியோ)











KDS
Kannane Digital Studio
www.kannane.ca | t: 416-830-1975

## பிறம்ரன் பன்மை











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைப் பண்பாட்டு விழாவில் முதன்முறையாக 'ஈழம் சாவடி'

றொறன்ரோ பெரும்பாகத்தின் பிறம்ரன் நகரின் ஒவ்வொரு வருடமும் நடைபெறும் 'கரபிறாம்' பன்மைப் பண்பாட்டு விழாவில், முதல் தடவையாக அமைக்கப்பட்ட தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய 'ஈழம் சாவடி' பல்லாயிரம் மக்களின் பலத்த வரவேற்பைப் பெற்றது. பிறம்ரன் தமிழ் ஒன்றியம் மிக வெற்றிகாமாக இதனைப் பொறுப்பேற்று, சான்டல்வூட் பார்க்வேயில் அமைந்துள்ள உதைபந்தாட்டத் திடலில் நடத்தி அனைவரதும் பாராட்டுகளைப் பெற்றது. கடந்த மாதம் 12 முதல் 14 வரையான மூன்று நாட்கள் இடம்பெற்ற இந்நிகழ்வின் சில ஒளிப்படங்களை இங்கு காணலாம்.
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்புறுதியின் பயனைக் காலம் சொல்லும்

iNFORCE LIFe
Financial Services Inc.
a division of
iNFORCE
Group of Companies


Insurance Solutions for
LIFE | HEALTH | GROUP
Investment

Chandran Rasalingam CHS
President & CEO

Bus: (416) 321-6000
Direct: (416) 909-0400

www.inforcelife.com

10 Milner Business Court, Suite 707
Scarborough ON M1B 3C6



WANT TO BECOME A FINANCIAL ADVISOR...
JOIN OUR FREE CLASSES TO GET YOUR INSURANCE LICENCE FAST!

Grow with us. Join our Dynamic Team!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முருகவே பரமநாதன் (ஆழ்கடலான்)

# நாணயம் - நா நயம்

இரு பதங்களிலும் - ந - என்றும் அட்சரம் அமைந்திருக்கின்றது. அதிகமான பிராணிகளுக்கும் நாக்குண்டு. மனிதன் மனதிலே பேசும் வாய்ப்பைப் பெற்றவன். பேசாதவர்களை மூங்கையென்பர். விஞ்ஞான உலகிலே பேசாதவர்களுக்குப் பள்ளிக்கூடங்கள் உண்டு. சைவசமயத்திலே பேசவைத்த கதைகளுமுண்டு. ஊமன்ட கனவு என்னாகும். நாணயம், நா இரண்டிலும் நகரம் பெறுமதியானது. எல்லா நலத்திலும் நாநலம் மேலானதெனச் செந்நாப்போதார் பாடியுள்ளார். பஞ்சாட்சரத்திலே ந முன்னிற்கிறது அன்றோ.

திரிகரண சுத்தியாய் இருப்பது மேலான ஒழுக்கம். மனம், வாக்கு, காயம். காயம் - உடம்பு, கிளி, பூவை என்பனவாகும். பேசும் வல்லமையுடையன. நாக்கு நல்ல ஆயுதம். நேர்மை, நீதி, நியாயம் நாக்கின் செயற்திறன்கள். இனியவுளவாக இன்னாத பேசல் கனியிருப்பக் காய் கவர்ந்தற்று. நாவினாற் சுட்ட வடு ஒரு காலமும் அழியாது. நாக்கினாலே பேசலாம். இன்னிசை மெல்லிசை மகிழ்ச்சியூட்டும். இசைத்தமிழ், முத்தமிழ்களிலொன்று. வாச்சியங்களினோசை உணர்வுபூர்வமானது. இனிமையும் நீர்மையும் தமிழெனல் ஆகும். நாக்காட்டி, பிறரை நளினம் பண்ணக்கூடாது.

முத்தமிழில் இசையுமொன்று. இன்னிசை வீணையர் யாழினர் ஓர் பால் என மணிமொழியார் பாடினார். பாம்பாட்டியின் மகுடியிற் படமெடுத்து ஆடும் பாம்பு பக்கவாத்தியங்களோடு தமிழ் பாடின் உயர்வாய் இருக்கும். அவ்வையும் அருணகிரியாரும் முத்தமிழைத்தா எனப் பாட்டிசைத்திருக்கின்றார்கள். கல்லும் கசிந்துருகும் தமிழ் இசையில் மூவேந்தரும் அக்கறையுள்ளனர். சப்த சுரங்கள், பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பாணர் நூல்கள் யாழினிது, குழலினிது என்பர் தம் மக்கள் மழலைச் சொற் கேளாதவர். சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்றைந்தின் வகை தெரிவான் கட்டேயுலகு. அன்னையர் சுவை பார்ப்பதும் நாவினாலேதான்.

இந்த இனிமையைப் பாவித்து ஒன்றுபடுகின்றோம். கவலையைத் தீர்ப்பதும் இசையே. சபதம் செய்வோர் நாக்கையறுப்பர். விண்ணாணம் பேசுவதும் நாக்கினாற்றான். நம் பேச்சும் ஏச்சும் அளவாயமைதல் சாலவும் நன்று. எனவே கொடுஞ்சொல்லை ஒழீகி, இன்சொல்லை நாம் பாவிப்போமாக.

இனிது இனிது ஏகாந்தம் இனிது என்றார் தமிழ் மூதாட்டி. இனத்தவரோடு ஆசானோடு நண்பரோடு, குருக்களோடு அன்பாய் உறவாடுவோம். மனித சுபாவங்களை வளர்க்க நாம் இனிமையை வளர்ப்போமாக. எப்போதும் வன்கணத்தைவிட்டு இன் கணத்தைப் பாவிப்போமாக. நயன் தரும் நாவொன்றே மனித சமூகத்தின் வழிகாட்டி. நாணயந்தான் மனித வெளிப்பாடு. எனவே நம் நாக்கை வெகு நாகரிகமாகப் பாவிப்போமாக.

சில இடங்களிலே மௌனமாய் இருப்பது நன்று. மௌனம் கலக நாஸ்தி. நாக்கை நல்லபடி பாவித்தால் மேன்மை தரும். பொது நோக்கில் நா மிக மிக உயர்ந்த ஆயுதமாம். எனவே மனித சுபாவங்களை வளர்க்க மனித நேயங்களும் ஆளுமைகளும் இன்றியமையாதனவாம். எங்கும் எதிலும் எப்போதும் அன்பைப் பயன்படுத்துவோம். தண்டனையிலும் அன்புவழி மேலானதாம். பரமகம்சர், காந்தியடிகள், அன்னை தெரேசா போன்ற மகான்களின் பாதையிலே எம்மை வழிநடத்த வேண்டும். நாவே நம் பாதை, வழி. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்றைந்தின் வகை தெரிவான் கட்டே உலகு. எம் அன்னையர் சுவை பார்ப்பது நாக்கினால்.

இந்த இனிமையைப் பாவித்து ஒன்றுபட்டு வாழ்கிறோம். கவலையைத் தெரிவிக்கும் ஒப்பாரி - துக்கத்தை வெளிப்படுத்தும் சபதம் பேசுவோர் நாக்கை அறுப்பர்.

வள்ளுவனார் இனிய உளவாக இன்னாமை பேசுதல் கனி இருப்பக் காய் கவர்ந்தற்று என்றார். எனவே எப்பேச்சும் ஏச்சும் அன்பாய் அமையட்டும். உலகம் வன்செயலை விட்டு இனிமை பேண வேண்டும். நல்ல பேச்சு இனியது. மற்றது கொடிது. இனிது எவையென அவ்வையார் பாடினார். குழந்தைகளோடு ஆசிரியரோடு அன்னையரோடு பெரியவரோடு அயலோடு இனசனத்தோடு உறவை நீடிக்க இனிமையாய்ப் பேச வேண்டும். எல்லாவற்றுக்கும் அன்பே காரணம். எனவே எல்லாரோடும் இனிமையாய்ப் பேசுவோம்.

எல்லோரும் விரும்புவது இனிமையயைத்தான். எனவே மனித சுபாவத்தை வளர்க்க மனித நலனைக் கட்டியெழுப்ப, தோழமை பேண, நிலைநாட்ட எம் நாக்கைப் பக்குவமாய்ப் பாவிப்போம். எங்கும் எதிலும் எப்போதும் வன்கணத்தைவிட்ட இன்கணத்தைப் போற்றுவோம். அன்பைச் சொரிவது நாக்குத்தான், தண்டனையிலும் அன்பு வழி நற்பயனளிக்க உலகம் ஒன்றே குலமும் ஒன்றே என்ற உண்மையை அனுபவ வாயிலாக அறிவோம். எனவே நாவொன்றே மனித சமுதாயத்தைக் கட்டி வளர்க்கும். நாக்கை நாகரிகமாகப் பாவிப்போம். அது நயத்தக்க நாகரிகமாகப் பயன்படுத்த வேண்டும். மானம் காப்பது மரியாதை தருவது நல்ல பேச்சு. நல்ல எழுத்து நல்ல பேச்சு என்பன. எனவே எம் நாக்கை நல்லபடி பாவித்து உயர்வோம். பிறரை உயர்த்துவோம்.

பகை உணர்வு வேண்டாம். ஒருவரோடு ஒருவர் கைகோர்த்து பட்சத்தை பரிவை உறவை வளர்ப்போம். நாக்கு நல்ல ஆயுதம் என்பதை ஒவ்வொருவரும் உணர்வோம். பகைமை உணர்வு வேண்டாம் பட்சம் பரிவு பாராட்டுவோம். ஒன்றே குலம் ஒருவனே தேவன் உங்கள் சமய ஒழுக்கங்களை பேணி, இயேசுநாதர் சொன்னபடி புத்தர் காட்டிய வழிப்படி நபி நாயகம் எழுதியவண்ணம் காந்தியும் பரமஹம்சரும் வழிப்படுத்தியபடி எம்மை நெறிப்படுத்துவோம். கடந்த கால தவறுகளை அகற்றி உசிதமான கொள்கை கோட்பாடுகளை வளர்ப்போம். எல்லாவற்றுக்கும் நாவே காரணம். நாநலம் எல்லா நலங்களிலும் மேலானவை.

இதுவரை நா நயம் பற்றிப் பார்த்தோம். இனி நாணயம் பற்றிச் சிந்திப்போம்.
யாகாவாராயினும் நாகாக்க காவாக்காற்
சோ காப்பர் சொல்லிழுக்குப் பட்டு 127-
அடக்கமுடைமை
(சோ காப்பர் - துன்பப்படுவர்)
நஞ்சு நாக்குகள் - தேவாமிர்த
நாக்காகட்டும்

(32ஆம் பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்



* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளான்ற்' சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

**MONDAY - SATURDAY**

**(416) 266-5161**

(Near Kennedy Subway - Rainbow Village Building)

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

2466 Eglinton Avenue East, Unit #7

Scarborough, Ontario M1K 5JB



# Computek College

BUSINESS · HEALTH CARE · TECHNOLOGY

Est. 1991

www.computek.edu

We provide assistance for Second Career funded Applicants. E.I receiving /received, Maternity benefits received, WSIB, Ontario Works clients & New Immigrants welcome

**SECOND CAREER**

**You maybe eligible upto $28,000 to pay for:**

Living Expenses
Transportation
ChildCare
Books
Tuition and other

**Diploma Programs**

- Early Childcare Asst (ECA)
- Personal Support Worker (PSW)
- Medical Office Admin (MOA)
- Computerized Accounting
- Business Administration
- Application Development
- Network Engineering
- Enterprise Network Engineering

| Markham Campus | Scarborough Campus | Toronto Campus |
|---|---|---|
| Markham / Steeles | Kennedy / Sheppard | Kennedy / Eglinton |
| 905.471.3344 | 416.321.9911 | 416.285.9941 |

Not all the courses are available at all the locations



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நக்கீரன்

# என்றுமுள்ள செந்தமிழ்

68



## பக்திக்குத் தமிழ்மொழி

உலக மொழிகளுள் உயர்தனிச் செம்மொழியாய் விளங்குவது இனிய தமிழ்மொழியே ஆகும். மொழிகளில் வணிகத்துக்கு ஆங்கிலம், இசைக்குக் கிரேக்கம், சட்டத்துக்கு இலத்தீன், தத்துவத்துக்கு ஜெர்மன், காதலுக்கு இத்தாலி, தூதுக்கு பிரஞ்சு எனக் கூறும் பன்மொழி அறிஞர்கள் பக்திக்குத் தமிழ் எனக் கூறுகிறார்கள். தமிழ் மொழி பக்தியை அடிப்படையாக கொண்டுள்ளது. தமிழர்கள் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு சமயங்களைப் பின்பற்றி வந்திருக்கிறார்கள். அதன் காரணமாக அனைத்துச் சமயங்களுக்கும் இடமளிக்கும் பண்பு தமிழர்களிடம் காணப்படுகிறது. தமிழர்களிடம் காணப்படுவது போன்ற சமயப் பொறுமை வேறு இனத்தவரிடம் காணப்படவில்லை. இதனால் திருவள்ளுவர் அடிப்படையில் சமணராக இருந்தாலும் அவர் இயற்றிய திருக்குறள் பொது மறையாக அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

கிபி 6 ஆம் நூற்றாண்டில் பக்தி இயக்கத்தினைத் தொடக்கியவர்களாக காரைக்கால் அம்மையாரும் திருமூலரும் விளங்குகின்றனர். அவர்களைத் தொடர்ந்து 7 ஆம் நூற்றாண்டில் நாயன்மார்களும் பன்னிரு ஆழ்வார்களும் பக்தி இயக்கத்தினை வீறு கொண்டு எழச் செய்தனர். சமணம் மற்றும் பவுத்தம் இரண்டின் வீழ்ச்சிக்கு பக்தி இயக்கமே காரணமாகும்.

உலக மொழிகளோடு ஒப்பிடுகையில், எண்ணிக்கை, தொன்மை, யாப்பியல், இசை வடிவங்கள் கொண்ட தமிழ் இலக்கியப் பரப்பே பரந்ததும் விரிந்ததும் ஆகும். தமிழில் கடைச் சங்க காலம் முதற் கொண்டு 20 ஆம் நூற்றாண்டின் இறுதி வரை தோற்றம் கொண்ட பல்வேறு வகையான இலக்கியப் பரப்பில் அறுபது விழுக்காட்டு இலக்கியங்கள் சமயம் குறித்து, சமணம், பவுத்தம், சைவம், வைணவம் குறித்து எழுந்தன.

தனிப்பாடல்களாக எடுத்துக்கொண்டால், எட்டுத் தொகையுள் ஒன்றாகிய பரிபாடலில், இசை வடிவாக முருகன், காடுகிழாள் (காளி) குறித்தெழுந்த இசைப்பாடல்களைக் காணலாம். சைவம் தந்த தனிநூலாக, முதல் கொடையாகக் கிடைத்துள்ளது நக்கீரனாரின் திருமுருகாற்றுப் படை ஆகும். சிறிய இடைவெளிக்குப் பின் கிபி 3 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்தில், உமையைப் போற்றிப் பாடும் தனிக் காதையாக வேட்டுவ வரியும், முருகனைப் புகழ்ந்து பாடும் குன்றக் குரவையும் அமைந்துள்ளன.

புகார் நகரத்தில் சிவன்கோயில் இருந்ததாகச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. 276 ஊர்களில் இருந்த சிவன் கோயில்களைக் குறிப்பிடும் தேவாரம் இதனைக் குறிப்பிடவில்லை. புகார் நகரைக் கடல் கொண்டது காரணமாகும்.

புகார் நகரத்தில் பலராமனுக்கும் கண்ணனுக்கும் தனித்தனிக் கோயில்கள் இருந்ததை அதே சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. 108 திருப்பதிகளைக் குறிப்பிடும் நாலாயிர திவ்வியப் பிரபந்தம் இந்தக் கோயில் பற்றிக் குறிப்பிடவில்லை.

கிபி 7 ஆம் நூற்றாண்டுக்கு முன்னதாகச் சங்க இலக்கிய அகப்பாட்டு நெறியில், சிவனைப் பாடுபொருளாகக் கொண்டு கல்லாடம் தோன்றியது. "கல்லாடம் கற்றவனிடம் சொல்லப் படாதே' என்பது பழமொழி. முதல் கணபதி வாழ்த்து இந்நூலில் இடம் பெற்றது.

தொடர்ந்து காரைக்கால் அம்மையாரின் மூத்த திருப்பதிகங்கள் இரண்டும், அற்புதத் திருவந்தாதியும், திரு இரட்டை மணிமாலையும் தோற்றம் கொண்டன. பதிகம் (10 பாடல்களைக் கொண்டது) அந்தாதி (ஒரு பாடலின் நிறைவை அடுத்த பாடலின் தொடக்கமாகக் கொண்டு 100 பாடல்களில் அமைவது) இரட்டை மணிமாலை (இரண்டு வகை யாப்புகள் அமைந்த பாடல்களை மாறிமாறி அடுக்கி 20 பாடல்களில் நிறைவிப்பது) என்ற புதிய இலக்கிய வடிவங்கள் காரைக்கால் அம்மையார் தமிழுக்குத் தந்த இலக்கியக் கொடைகளாகும்.

பத்தாம் நூற்றாண்டில் பேரரசன் இராசராச சோழனின் ஆட்சிக் காலத்தில் சிதம்பரம் கோயிலில் கவனிப்பாரற்றுக் கிடந்த திருமுறைகள் பூச்சிகளால் அரிக்கப்பட்டு அழிந்தவை போக எஞ்சியவற்றை அவன் மீட்டான். இதனால் அவன் திருமுறை கண்ட சோழன் என்று அழைக்கப்படுகிறான். இந்தத் தேவாரங்கள் நம்பியாண்டார் நம்பி என்பவர் முதல் 7 திருமுறைகளாகத் தொகுத்தார்.

திருமுறைகள் பழந்தமிழ் இசையையொட்டிய பண்களுடன் பாடப்பட்டு வருகின்றன. கோயில்களிலும் வீடுகளிலும், பள்ளிக்கூடங்களிலும் திருமுறைகள் இன்றளவும் பாடப்பட்டு வருகின்றன.
தமிழ் இலக்கியங்களில் தேவாரப் பாடல்கள் என்று குறிப்பிடப்படும் இந்த பதிகங்கள் ஒரு தனி இடத்தைப் பெற்றுள்ளன.

பன்னிரு திருமுறைகளில் 17 ஆசிரியர்கள் பாடிய மொத்தம் 18,266 பாடல்கள் காணப்படுகின்றன. இதில் தேவாரம் எனப் போற்றப்படும் ஞானசம்பந்தர் பாடிய பாடல்கள் 4,158, திருநாவுக்கரசர் 3,066, சுந்தரர் 1,026 ஆக மொத்தம் 8,250 ஆகும். திருவாசகம் எனக் கொண்டாடப்படும் மாணிக்கவாசகர் பாடிய பாடல்கள் 1,058 ஆகும். திருமூலர் பாடிய பாடல்கள் 3,000 சேக்கிழார் பாடிய பாடல்கள் 4,286 ஆகும். (பாடல்களின் மொத்த எண்ணிக்கை நூலுக்கு நூல் சிறிது வேறுபடுகின்றன) தேவாரம் தொகுக்கப்பட்ட முறையைப் பற்றி சைவ ஆச்சாரியர் உமாபதி சிவம் திருமுறை கண்ட புராணத்தில் பேசுகையில் ஞானசம்பந்தர் 15,000 பாடல்களையும் அப்பர் 49,000 பாடல்களையும் சுந்தரமூர்த்தி 31,000 பாடல்களையும் பாடிய-தாக பொல்லாப் பிள்ளையார் மூலம் விவரம் அறிந்ததாக குறித்துள்ளார்.

பன்னிரு ஆழ்வார்களால் பாடப்பெற்ற நாலாயிர திவ்ய பிரபந்தம் பெயருக்கு ஏற்ப 4,000 பாடல்களைக் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற முழக்கத்தை அடுத்துத் தமிழ் இனப்பெருமை பேசும், "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்ற சமய சமரசத்தை முன்வைத்த திருமூலரின் திருமந்திரம் தமிழ் இலக்கியக் கொடைகளுள் சிறப்பாகக் குறிக்கத்தக்கது.

“என்னை நன்றாக இறைவன் படைத்தனன், தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே' எனக் கட்டியம் கூறித் தொடங்கும் திருமூலர், சைவத்தைத் தோத்திர நெறியிலிருந்து சாத்திர நெறிக்கு எடுத்துச் சென்றார். மேலும் அவரே "சைவ சித்தாந்தம்" என்ற பெருநெறி தோன்ற வித்திட்டவர். தென்னாட்டு அறிஞர்களால் வடமொழியில் படைக்கப்பட்ட ஆகமங்களை மொழிபெயர்ப்புச் செய்யாமல், தமிழ் ஆகமமாகத் திருமந்திரம் படைக்கப்பட்டது. அறம், யோகம், மருத்துவம், தத்துவம் எனத் தமிழில் எழுந்த ஒரு சைவக் கலைக் களஞ்சியமாகவே திருமந்திரம் நிற்கிறது.

கிபி 2 ஆம் நூற்றாண்டு தொடங்கி 6 ஆம் நூற்றாண்டு காலம் வரை சமணமும் பவுத்தமும் தமிழ்மொழியை ஆட்சி செய்தன.

பின்னர் சைவப் பனுவல்களும் சிற்றிலக்கியங்களும் பெருங்காப்பியங்களும் தோன்றின. பிற்காலச் சோழர்களின் எழுச்சியும் சமயகுரவர் நால்வர் வருகையும் சைவம் வழி தமிழ்மொழிக்கு விலைமதிப்பற்ற இலக்கியங்கள் கிடைத்தன. "நாளும் இன்னிசையால் தமிழ் வளர்க்கும் ஞானசம்பந்தன்', "நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன் நாவினுக்கு அரையன்' என்ற சுந்தரர் பதிவுகள் அன்னார் இருவரும் சைவத்தின் பெயரால் தமிழ் வளர்த்த திறம் உரைத்தன. (தொடரும்)●

## ????????????

Power Broker
Trend Setter
Modern man
The Chairman
Easy Living
Cool Links
World Traveller
Sun Seeker
Simple & Practical

**இவைகள் என்னவாக இருக்குமென்று நினைக்கின்றீர்கள்!**
**கனடாவின் பிரபல்யமான மூக்குக் கண்ணாடி விற்பனை நிலையமொன்றில். கண்ணாடி வகைகளுக்கு வழங்கப்பட்டிருக்கும் பெயர்கள் இவைகள். முதல் நான்கும் ஆண்களுக்கானவை. மிகுதி ஐந்தும் பெண்களுக்கானவை. ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனியாக இப்பெயர்கள் சூட்டப்பட்டு, அவற்றில் பலநூறு வகையான கவர்ச்சி 'பிரேம்'களில் மூக்குக் கண்ணாடிகள் நேர்த்தியாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. இது, இந்தக் கோடை விடுமுறையின் ஸ்பெஷலாம்!**




| | | | |
|---|---|---|---|
| இறக்குமதி செய்யப்பட்ட கதம்ப சரம் | $ 2.00/ M | அறுகம் புல் | $ 3.00/bag |
| உள்ளூர் கர்னேஷன் சரம் | $ 2.00/M | வில்வம் இலை | $ 3.00/bag |
| மல்லிகைப்பூச்சரம் | $ 5.00/M | வேப்பிலை | $ 3.00/bag |
| கர்னேஷன் மலர்கள் | $ 0.20 each | Marukhalundu /Maru | $ 3.00 /bag |
| மல்லிகை மலர்கள் | $ 5.00/bag | மாவிலை | 10 per $ 1.00 |
| சம்பாகினி மலர்கள் | $ 3.00 /bag | வெற்றிலை | 10 per $ 1.00 |
| அரலி மலர்கள் | $ 3.00 /bag | வாழை இலை | $ 1.00 each |
| தாமரை மலர்கள் | $ 1.00 each | துளசி இலை | $ 3.00/bag |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகள் பிரியும்போது மலைகளையே சுமக்கவேண்டிவருகிறது

# உங்கள் உறவுகளின் இறுதியாத்திரையை முறையாகவும், இலகுவாகவும் அமைத்திட நாங்கள் உதவுகிறோம்





- மரண அறிவித்தல்கள்
  வீட்டிலிருந்த படியே விரும்பிய ஊடகங்கள் ஊடாக அறிவித்தல்களை வெளியிடவும்
- சமய சம்பந்தமான கிரியைகள் செய்பவர்களின் விபரங்களைப் பெற்றுக்கொள்ளவும்
- பூ அலங்காரங்கள், மாலைகள், பூப்பந்தல்களின் தெரிவுக்கும்
- விரும்பிய, பொருத்தமான Casket (மரணப்பேழை)களை பெற்றுக்கொள்ளவும்
- இணையத்தளத்தினூடாக நேரடி ஒளிபரப்புச் சேவையை பெற்றுக்கொள்ளவும்
- Slideshow உருவாக்கம் செய்யவும்
- உங்கள் கலாசார, பண்பாட்டு முறைப்படியே இறுதிச்சடங்குகளை ஒழுங்குசெய்வதற்கான ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளவும்
- உலகின் எப்பாகத்திலிருந்தும், எப்பாகத்திலும் Wreath (மலர்வளையம்) வைப்பதற்கான சேவையை பெற்றுக்கொள்ளவும்

MARANAM.COM

**HEAVEN CARES**

ADVISING FAMILIES ON YOUR LOVED ONE'S FINAL JOURNEY

www.maranam.com, E-Mail: info@maranam.com

Working With

Chapel Ridge

FUNERAL HOME INC.

PROVIDING PEACEFUL FINAL ARRANGEMENTS

8911 Woodbine Ave., Markham, ON L3R 5G1



Call: **Vilosan Sivatharman** B.Eng

Funeral Counsellor

**416-431-3600** Ext:1

Call: **Christeen Seevaratnam**

Funeral Counsellor

**416-431-3600** Ext:2







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்குத் தெரியும்,
நம்பிக்கையுடனான தரமான சேவைகள்..

On high with your thoughts

PRO MAR Ltd.



- Corporate Awards
- Promotional Products
- Laser Engraving
- Pad Printing
- Silk Screening

*Vivek Subra*
Director
B:416- 291 2344
D:416- 898 4846
promarawards@gmail.com

www.promarawards.com 416-291 2344
585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5

Put your logo on anything!


One stop for all your promotional needs.



PRO MAR Ltd.
416 898 4846
vivekpromar@gmail.com

வாங்குவதும் விற்பதும் சுலபமே ஆனால்..
தெளிவான தெரிவே உங்கள் வெற்றிப்படி.

*Why think so long...?*



- Free market evaluation
- Professional advice on selling your home for more
- State of the art marketing idea
- Flexible commission
- Friendly service producing excellent results
- List through me to have your property sold in a few days

Mortgages & loans arrangements

Vivek Subramaniam
Sales Representative
416- 898 4846

Homelife/Future
Realty inc. Brokerage
7 Eastvale Drive, Unit 205, Markham, On. L3S 4N8
Bus: 905 201 9977, Fax: 905 201 9229
Independently Owned and Operated

# NKS Draperies & Blinds

210 Silver Star Road, Unit. 825
(Midland & Finch) Scarborough, ON
**416 321 6420**





- Vertical blinds
- Venetian blinds
- Draperies
- Curtains
- Shutters

உங்கள்
இல்லங்களை
மாளிகையாக்கிட

அழையுங்கள்
கேதா

தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். கணேஷ்

# சர்வதேச போட்டியில் தமிழீழ அணி

ஐநா சபையால் அங்கீகரிக்கப்படாத நாடுகளுக்கான சர்வேதச உதை பந்தாட்ட போட்டியின் கடைசி நாளான ஜுலை 7ம் திகதி ஞாயிறு மாலை 15:00 மணிக்கு போட்டியின் மூன்றாவது இடத்தை தக்கவைத்துகொள்ளுவதற்காக தமிழீழ அணி Rateia அணியுடன் மோதினார்கள். இந்த சர்வதேச போட்டியானது Isle of man இல் Tynwald என்னும் மைதானத்தில் தொடங்கியது. மொத்தம் ஆறு அணிகளுக்கான இந்தப் போட்டி இரண்டு பிரிவுகளாக தொடங்கி குழு A மற்றும் குழு B என்ற நிலைப்பாட்டில் குழு Aஇல் மூன்று அணிகளும் குழு B இல் மூன்று அணிகளும் மோதி அதில் தெரிவடைந்த அணிகள் மீண்டும் முதலிடம் மற்றும் மூன்றாவது ஐந்தாவது இடங்களுக்காக போட்டியிட்டனர்.

முன்னர் நடந்த போட்டிகளில் குழு A இல் இருந்து Occitania அணியும் குழு B இல் இருந்து StJohns அணியினரும் பங்கு பெற்ற அனைத்து போட்டிகளிலும் வென்று முதல் இடத்துக்காக மோதினர். அதே போல குழு A இல் இருந்து தமிழீழ அணியும் குழு B இல் இருந்து Raetia அணியினரும் மூன்றாவது இடத்துக்காகவும் குழு A இல் இருந்து Sealand அணியினரும் குழு B இல் இருந்து Alderney அணியினரும் ஐந்தாவது இடத்துக்காக மோதினர்.

(6 ஜுலை 2013) Occitanaia அணியினருடன் மோதி முதல் இடத்துக்கான போட்டி வாய்ப்பை இழந்த தமிழீழ அணி மூன்றாவது இடத்துக்காக சுயநவயை அணியினருடன் மோதினர். தமிழீழ தேசிய கீதத்துடன் உற்சாகமாக தொடங்கிய போட்டி கட்டாயமாக வெற்றி காணுவோம் என்ற நிலையில் மிகவும் விறுவிறுப்பாக நடந்தது.

முதலாவது இலக்கை லாவகமாக கைப்பற்றிய சிவரூபன் (5) அவர்கள் போட்டி தொடங்கி 3 நிமிடத்துக்குள் தமிழீழ அணிக்கு தமது முதல் பந்தினை கோல் கம்பத்தினுள் செலுத்தி போட்டியின் சமநிலையினை மாற்றினார்கள். அதை அடுத்து 15.20க்கு கஜேந்திரன்(10) உதவியுடன் மதன்ராஜ் (15) அணிக்கான இரண்டாவது இலக்கை உள்ளே செலுத்தி அணியின் இலக்கை இரண்டாக உயர்த்தினர்.

மத்தியஸ்தரின் எச்சரிக்கைளையும் மீறி தமிழீழ அணி வீரர்களின் ஆட்டத்தை முறையற்ற வகையில் தடுத்து விளையாடிய Raetia அணியில் மூன்று பேருக்கு சிவப்பு மட்டை காட்டப்பட்டு போட்டியை விட்டு வெளியேற்றபட்டனர். முதலுதவிக்கு பொறுப்பாக இருந்த தீபன் அவர்கள் வீரர்களின் காயங்களை உடனுக்குடன் சரி செய்து அவர்களுக்கு உற்சாகம் தெரிவித்து வீரர்களை போட்டியில் தொடர்ந்து பங்கு பெறுமாறு வழிவகுத்துக் கொண்டிருந்தார்.

போட்டியின் கடைசி சுற்றில் பந்துக்காக(8) மைதானத்தில் இறங்கிய ஜிவிந்தன்(11) தொடர்ந்து மூன்று உதைபந்தாட்ட இலக்கை எதிர் அணி பந்தாட்ட இலக்கு வலைக்குள் இறக்கி, ஈழ அணியின் மொத்த இலக்கு எண்ணிக்கைகளை ஐந்தாக உயர்த்தி அணிக்குப் பெருமை சேர்த்தார்.

இங்கிலாந்து முன்னாள் உதைபந்தாட்ட வீரர் திரு Paul Reaney அவர்கள் போட்டியில் கலந்து கொண்டு தமிழீழ அணி வீரர்களை பாராட்டி அவர்களுக்கு மூன்றாவது இடத்துக்கான வெற்றிக் கோப்பையையும் ஆட்ட கதாநாயகனுக்கான கோப்பையையும் பங்கு பற்றிய அனைவருக்கும் பதக்கமும் சூட்டினார்.

முக்கோணக் கிரிக்கெட் தொடரில் மூன்று தமிழ் மாணவர்கள் கண்டி பல்லேகலவில் எதிர் வரும் 12 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள முக்கோண கிரிக்கெட் தொடரில் விளையாடுவதற்கு 3 தமிழ் மாணவர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

ஸ்ரீலங்கன்றெஸ் கிரிக்கெட் அணி, ஸ்ரீலங்கன் "ஏ' அணி மற்றும் ஸ்ரீலங்கன் இணைந்த அணிகளுக்கு இடையே நடை பெறவுள்ள முக்கோண கிரிக்கெட் தொடருக்காகவே அவர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர் என்று இலங்கை தேசிய அணியின் முன்னாள் வீரரும் வடமாகாண கிரிக்கெட் பயிற்றுவிப்பாளருமான ரவீந் திரபுஸ்பகுமார தெரிவித்தார்.

ஸ்ரீலங்கன் "ஏ' அணிக்காக சென். பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த நிசாத் ரியுட்டரும், ஸ்ரீலங்கன் றெஸ் அணிக்காக கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த வேகப்பந்து வீச்சாளரான எஸ். சிலோஜனும், ஸ்ரீலங்கன் இணைந்த அணிக்காக மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியைச் சேர்ந்த எஸ். சஞ்சீவனும் உள்வாங்கப்பட்டுள்ளனர்.●

Get more from your home by paying less each month

Ragavan (Raga) Ramanathan AMP
Mortgage Development Manager
Platinum Performer

Scotiabank®

You're richer than you think.®

Tel: 416.579.7533
Fax: 416.352.1464
Email: ragavan.ramanathan@scotiabank.com





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்தமான ஒரு வீடு உங்கள் வாழ்க்கையின் மிகப்பெரியதோர் முதலீடு

# வீடு வாங்க விற்க



**ஈசன் குலசேகரம்**
Sales Representative
**416 835 1700**
info@esanhomes.com

- வீடுகள்
- தொடர்மாடி வீடுகள்
- வியாபார நிலையங்கள்
- காணி முதலீடுகள்
- வாங்குதல் - விற்றல் மற்றும்
- வாடகைக்கு கொடுக்கவும் - பெறுவதற்கும்

**விக்கி வேலாயுதன்**
Sales Representative
**416 457 7162**
vvelauthan@yahoo.com

RE/MAX
RE/MAX Vision Realty Inc., Brokerage



அனைத்துக்குமான ஆலோசனைகளுக்கும்
நம்பிக்கையான சேவைகளுக்கும் நாடுங்கள்..

**Office: 416-321-2228 Fax: 416-321-0002**

www.esanhomes.com

2210 Markham Road # 1 , Toronto, ON M1B5V6




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். காந்தி

# வெள்ளிப் பணம் 78

வெள்ளிப்பணத் தொடரில் இம்முறை ஒன்ராறியோவில் உயர்ந்து செல்லும் உயர்கல்விக் கட்டணமும் மாணவர்களின் மன அழுத்தமும் பற்றி ஒரு பார்வையாக அமைகின்றது.

பொதுவாக கனடாவில் உயர்கல்வி என்பது இலவசமாக கொடுப்பதில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயமாக இருந்தாலும் இதற்கான கட்டணங்கள் வருடா வருடம் அதிகரித்து செல்கின்றது. குறிப்பாக அதிக உயர்கல்விக் கட்டணங்களை அறவிடும் பல்கலைக்கழகமும் சரி கல்லூரிகளும் ஒன்ராறியோவில்தான் அதிக கட்டணம் அறவிடப்படுவதாகவும் புள்ளிவிபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. அடுத்ததாக அல்பேட்டா மாகாணத்தினை குறிப்பிடலாம்.

இதேபோல குறைந்த கல்விக்கட்டணத்தினை அறவிடும் மாகாணங்களில் முதன்மை வகிப்பது நியூபவுண்லாந்து, லபடோர் (Newfoundland & Labrador) மாகாணத்தினை குறிப்பிடலாம். அடுத்த நிலையில் இருப்பது Quebec மாகாணமாகும்.

இவ்வாறான சூழ்நிலையில் ஒன்ராறியோ மாகாணத்தில் உயர் கல்வியை முடித்த பலர் வேலை உடனடியாக கிடைக்காத காரணத்தினால் கல்விக்காக பெற்ற கடனை திரும்ப செலுத்துவதில் பிரச்சனையை எதிர்நோக்குகின்றனர்.

குறிப்பாக தமிழ் சமூகத்தில் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கும் ஒரு சமூகமாக இருந்தாலும் இன்று சில மாணவர்கள் நாம் படித்த கல்வி நமது பொருளாதார நிலையை வலுப்படுத்த உதவுமா அல்லது சமூகத்தில் நமக்கு மிஞ்சுவது போலிக் கௌரவமா என்கின்ற கேள்வியை கேட்க ஆரம்பித்துள்ளதை அவதானிக்கலாம். காரணம் தற்போது இளைய தலைமுறையினரின் வேலையற்றோர் விகிதம் சராசரியாக 13% க்கு குறையாமல் காணப்படுவதாக சொல்லப்படுகின்றது. இதனால் பலர் தமது கல்வித்தகமைக்கு ஏற்ப தொழில் பெறுவதில் பிரச்சனை எதிர்நோக்குகின்றனர்.

இன்னும் சில பெரிய நிறுவனங்கள் தகுதியானவர்கள் இங்கு இருக்கும்போதே இந்தியா மற்றும் சில ஆசிய நாடுகளில் இருந்து வேலைக்கு அமர்த்திய விடயங்கள் நடைபெற்று அது தற்பொழுது கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாயினும் இது எவ்வளவு தூரம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பது சில மாணவர்களின் கவலையாக உள்ளது. கடந்த சித்திரை மாதத்தில் ஆங்கில ஊடகங்களில் இதனைப் பற்றிய விடயங்கள் பெரிதாக விவாதிக்கப்பட்டது.

கனடாவில் குறிப்பிட்ட தொழிலுக்கு தகமையானவர்கள் இல்லாத சூழ்நிலையில் மாத்திரம் வெளிநாட்டில் இருந்து ஆட்கள் வேலைக்கமர்த்த முடியும். ஆனால் கனடாவில் முக்கிய வங்கி ஒன்று இதனை மீறி செயல்பட்டதும் பின்னர் ஊடகங்கள் மூலம் தெரியவந்ததும் தற்பொழுது அரசு இப்படியான விடயங்கள் நடைபெறாமல் கவனிப்பதாக உறுதி கூறிய விடயங்களும் இங்குள்ள இளம் தலைமுறையினரை மிகவும் மனஅழுத்தத்திற்கு உள்ளாக்கியுள்ளது.

சமீபகாலத்தில் 4 வருட பல்கலைக்கழக கல்வியை முடித்தவர்கள் சராசரியாக $35,000 கடன் சுமையுடன் வேலை தேடிக்கொண்டிருக்கும்போது இப்படியான செய்திகள் தகவல்கள் மேலும் அவர்களின் மன அழுத்தத்தினை அதிகரிக்கின்றது.

இன்று எமது சமூகத்தில் திருமண பேச்சு வார்த்தையின் போது கேட்கப்படும் கேள்விகளில் மணமக்கள் படித்தகவர்களாயின் அவர்களின் (student Loan) எவ்வளவு இன்னும் இருக்கின்றது என்னும் கேள்வி முக்கியத்துவம் பெறுகின்றது. இதில் விதிவிலக்காய் இருப்பது காதல் திருமணங்கள்.

இப்படியாக பல்வேறு காரணிகள் இன்றைய உலக பொருளாதார ஒழுங்கின் மாற்றத்தால் வேலையற்ற மாணவர்களின் கடன் பளுவைக் குறைக்க அரசாங்கமானது பல புதிய வழிமுறைகளை 1998ம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தி வருகின்றது. இது எவ்வாறு என்பதினை அடுத்த கட்டுரையில் தொடரும்.●


R & S AUTO SALES
Top Quality Used Car Dealer
வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட
வாகனங்களை விற்பது எமது விசேட திறன்
36 வருட அனுபவம்



HONDA
TOYOTA
GM-MINI VANS
We Sell Bank Repossed Cars
Accident Vehicle Repair
Computerized Painting
Motor Vehicle Accident
Traffic Tickets



தமது சிறப்பான சேவையால் அதி உயர் விருது பெற்ற
Radha
R & S Auto Sales Inc.
Radha Motor Inc.
3030 Markham Road
Scarborough, ON
416-412-3838
416-836-5825




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு குடையின் கீழ் சகல தேவைகளும்

எஸ்.பி. இம்போட்டர்ஸ்
S.P. Importers



Fresh Fish & Meat
2853 Lawrence Ave. East
Scarborough
416 261 4737

Furniture & Mattress
2859-2861 Lawrence Av. E.
Scarborough
416 266 3077

Grocery & Vegetables
2863 Lawrence Ave. East
Scarborough
416 261 3881

Video & Audio
2865 Lawrence Ave. East
Scarborough
416 261 3881

## கொங்கை இழந்த...

மார்பக பரிசோதனை செய்ய வேண்டும். 40 வயதிற்கு மேல் இது வருடமொருமுறை செய்யப்பட வேண்டும்.

* வலுவான மார்புப் புற்று நோய் வரலாறு உள்ள பரம்பரையில் உள்ள பெண்கள் தமது 35 வயது முதல் வருடாவருடம் மமோகிராம் பரிசோதனை செய்ய வேண்டும். இது வழமையான மருத்துவ மார்பக பரிசோதனைக்கு மேலதிகமாகச் செய்யப்பட வேண்டும்.


மமோகிராம் பரிசோதனை
* 50 முதல் 69 வயது வரையான ஏனைய எல்லாப் பெண்களும் இரு வருடங்களுக்கு ஒரு முறை மமோகிராம் பரிசோதனை செய்ய வேண்டும். ஆயினும் அரச மருத்துவமனைகளில் இதற்கான வசதி கொழும்பு, கண்டி, காலி, பொலனறுவ ஆகிய நகரங்களில் மட்டுமே உள்ளன. தனியார் துறையைப் பொறுத்தவரை கொழும்பு, கண்டி, கம்பஹா, மாத்தறை போன்ற பெரு நகரங்களில் மட்டுமே தற்போது இருக்கிறது எனத் தெரிகிறது. வட கிழக்குப் பகுதியில் எதுவும் இல்லை என்பதையும் குறிப்பிடலாம்.
* சாதாரண மருத்துவப் பரிசோதனையில் கண்டு பிடிப்பதற்கு இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்னரே மமோகிராம் மூலம் கண்டு பிடிக்கக் கூடியதாக இருக்கிறது. எனவே பெண்கள் இதைப் கூடியளவு பயன்படுத்துவது வரவேற்கத்தக்கது. ஆயினும் இளமார்புத் திசுக்களை பாதிக்கக் கூடும் என்பதால் 35 வயதிற்கு முன்பு செய்யப்படுவதில்லை. அவர்களுக்கு அல்ரா சவுண்ட் ஸ்கான் மூலம் பரிசோதிக்கலாம்.
* ஒரு பெண் தனக்குத்தானே சுயபரிசோதனை செய்வது எப்படி என்பதை மருத்துவர்கள் பெண்களுக்கு சொல்லித் தருவது அவசியம். இதன் மூலம் தனக்கு மார்பகப் புற்றுநோய் வந்திருக்கிறதா எனக் கண்டறிய முடியும். பத்திரிகைகள், இலத்திரனியல் ஊடகங்கள், இணையம் போன்றவற்றில் இது பற்றிய தகவல்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன.

மேலை நாடுகளில் மமோகிராம் செய்யப்படுவது கட்டாயம் ஆக்கப்பட்டுள்ளது. ஆனால் இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் தாங்களாகவே செய்தால்தான் உண்டு. அல்லது வேறு நோய்களுக்காக மருத்துவரிடம் செல்லும்போது ஆலோசனை சொல்லக் கூடும். கட்டாயமும் இல்லை, அதற்கான வசதி நாடு பூராவும் இல்லை என்பதும் துரதிர்ஷ்டமே.

மருத்துவர்கள் செய்யும்படி ஆலோசனை கூறினால் கூட பெரும்பாலானவர்கள் தட்டிக் கழித்துவிடுகிறார்கள். நோய் பற்றியும் அதனால் ஏற்படக் கூடிய பாதிப்புகள் பற்றியும் போதிய விழிப்புணர்வு இல்லாமையே இதற்குக் காரணம்.●

The Children's Education Trust of Canada
offered to the public by

Children's Education Funds Inc.



10 டாலரிலிருந்து ஆரம்பித்து
7200 டாலர்கள் வரை
கனடா அரசாங்கம் வழங்கும்
நன்கொடையைப் பெற்று
(20 வீத Grant)
உங்கள் பிள்ளைகளதும்
பேரப்பிள்ளைகளதும்
கல்வி வாய்ப்பை
ஊக்குவியுங்கள்.

சமூக நம்பிக்கையையும்
நன்மதிப்பையும் பெற்ற
சிவா
கணபதிப்பிள்ளை
அவர்களை அழைத்து
விபரங்களைப் பெறுக!

Siva Kanapathypillai
Branch Manager

416 438 0660, 416 438 3578
416 899 6044
இல்லத் தொலைபேசி:
905 472 1139
email
s.kanapathypillai@cefi.ca



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீத்தார் பெருமை
# 'பார்ளிமென்ற்' நடராஜா

இலங்கையின் ஊடக வரலாற்றில் 1950களின் பிற்பகுதியில் பத்திரிகையாளராக வாழ்க்கையை ஆரம்பித்தவரான மூத்த ஊடகவியலாளர் செல்லப்பா நடராஜா, கடந்த மாதம் எட்டாம் திகதி தமிழீழத்திலுள்ள கோண்டாவிலில் தமது 83வது வயதில் காலமானார்.



கொழும்பிலிருந்து வெளிவரும் தினகரன் பத்திரிகையில் தமது இருபத்தைந்தாவது வயதில் - 1955ஆம் ஆண்டு இணைந்து, செய்தி மற்றும் கட்டுரை ஆகிய இரு துறைகளிலும் நன்கு தேர்ச்சி பெற்ற இவர், 1961ல் இலங்கை பாராளுமன்றத்தில் 'ஹான்சார்ட்' அறிக்கையாளராகச் சேர்ந்து கால் நூற்றாண்டுகள் பணியாற்றினார். இக்காலத்தில் 'பார்ளிமென்ற் நடா' என்ற பெயரில் மிகவும் பிரபல்யம் பெற்றிருந்தார்.

பாராளுமன்றத்தில் கடமையாற்றிய வேளையில் அதன் நடைமுறை, சபை அமர்வுகள், சபாநாயகர் கடமைகள், சம்பிரதாயங்கள், சூடான விவாதங்கள் போன்று தாம் நேரில் கண்ட-அறிந்த விடயங்களை தினகரன் மற்றும் வீரகேசரி பத்திரிகைகளில் கட்டுரைகளாக எழுதி வந்தார்.

1985ல் சிரேஷ்ட ஹன்சார்ட் அறிக்கையாளர் பதவியின் இருபத்தைந்தாண்டு பூர்த்தியின் நினைவாக 'எனது நோக்கில் இலங்கைப் பாராளுமன்றம்' என்னும் கட்டுரைத் தொகுப்பு நூலொன்றை வெளியிட்டார். இந்நூலின் வெளியீட்டு விழா 1986ல் கோண்டாவிலில் நடைபெற்றது. பாராளுமன்ற விவகாரங்கள் தொடர்பாக தமிழில் வெளிவந்த முதலாவது நூலாகவும் ஒரேயொரு நூலாகவும் இதுவே திகழ்கின்றது.

திரு. செல்லப்பா நடராஜா அவர்கள் சிறந்த கட்டுரையாளர் மட்டுமன்றி நல்லதொரு விபரணச்சித்திர படைப்பாளியும் நகைச்சுவைப் பேச்சாளருமாவார். பிற்காலத்தில், யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பல பத்திரிகைகளில் அடிக்கடி எழுதி வந்தார். 'தமிழர் தகவல்' சஞ்சிகைக்கென இவர் எழுதிய கட்டுரைகள் இரண்டு ஆண்டு மலர்களில் வெளிவந்துள்ளன.

கோண்டாவில் நெட்டிலைப்பாய் பிள்ளையார் கோவில் தர்மகர்த்தாக்களில் ஒருவராகவிருந்த இவர், சிறந்த சமூகப் பணியாளர். சமூக அமைப்புகள் பலவற்றில் அங்கம் வகித்தவர். நான்கு பிள்ளைகளின் தந்தையான இவரின் ஏகபுதல்வரான வாகீசன், கனடாவிலுள்ள மொன்றியல் முருகன் கோவிலின் நீண்டகாலத் தொண்டராவார்.

- திரு

# ஆபத்தான நாடுகளில் இலங்கை முதல் பத்தில்

உலகின் ஆபத்தான நாடுகளாகப் பட்டியலிடப்பட்டிருக்கும் முதல் பத்தில் இலங்கையும் ஒன்று. முதலிடத்தில் எல் சல்வடோர் உள்ளது. ஒபன்பதாமிடத்தில் இலங்கையுள்ளது. ஆயுத வன்முறை இன-மத தாக்குதல்களை அடிப்படையாக வைத்துத் தயாரிக்கப்பட்ட ஓர் அறிக்கை கடந்த ஜூன் மாத இறுதியில் ஐக்கிய நாடுகள் சபையில் வெளியிடப்பட்டது. வன்முறைகள் காரணமாக ஒவ்வோராண்டும் உலகில் ஐந்து லட்சம் மக்கள் கொல்லப்படுவதாக இந்த அறிக்கை சுட்டுகின்றது.


HERITAGE
Education Funds

**RESP**
**SAVINGS PLAN**
**கல்விச் சேமிப்புத் திட்டம்**

Your are eligible to apply for and Education Savings Grant of up to $7,200 per child

Your savings are more safe and secure

Your can start with a small amount

it's a more flexible plan

**EDUCATION IS A GREAT GIFT FOR YOUR FUTURE GENERATIONS**


உங்கள் பிள்ளைகளின் கல்விக்கான சேமிப்பு உங்கள் எதிர்கால தலைமுறைக்கான முதலீடு

WWW.KERUDAVIL.COM

**INCOME TAX PREPARATION**

Personal Income Tax
Small Business Income Tax
Computerized Returns

Graphic Land - 647. 219. 7576



S.Ganthiy
B.A. Srilanka
Enrollment Officer

416. 841. 1866
416. 955. 9303
E.mail: ganthiy@rogers.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாணயம்..

சில நாக்குகள் சொன்னால் பச்சை மரமும் பட்டுப்போம் அவ்வளவு கொடிய நாக்கு.

நாவின் பெருமையும் திறமையும் ஆறறிவு படைத்த மனித குலத்திடையே நிறைந்து வழிகிறது. நல்லவர்போல் நடப்பர். நா நலத்தோடு தொடர்புடையதுதான் நாணயமும் இங்கே இரு பொருளமைவிலே எடுத்தாளப்படுகிறது. ஆதி நதிக்கரை நாகரிக ஆட்சியின்போது கொடுக்கல் வாங்கல்களுக்காக பலவித லோகங்களிலே காசு அடித்தார்கள். இதைக் காசு, நாணயம் என்று அழைத்தனர். உதாரணமாகச் சிங்கையாரிய மன்னராற் பலவித நாணயங்கள் புழக்கத்தில் விடப்பட்டது. எகிப்து, பாரசீகம், இந்து நதியோரம், சீனா போன்ற நாடுகளில் வெளியிடப்பட்டது. இதைக் காசு எனவும் அழைத்தனர். அக்காலத்திலே மரம், வெள்ளி, பித்தளை, வெண்கலம், தங்கம் என்பவற்றிலும் காசு அடிக்கப்பட்டது. இவை எல்லாமே நாணயங்கள் என வழங்கப்பட்டது. பொருள் பண்டமாற்றுக்குப் பதிலாக - நாணயம் புழக்கத்தில் வந்தது. வல்லிபுரம் என்றழைக்கப்படும் சிங்கைநகர், கந்தரோடை ஆனைக்கோட்டை, கேதீஸ்வரம் என்னும் இடங்களில் மன்னர்கள் இதைப் பரப்பினர். அரைச் சதம், காற் சதம், ஒரு சதம், பத்து சதம், ஒரு ரூபா போன்ற நாணயங்கள் ஆங்கிலேயர் ஆட்சியில் வெளியிடப்பட்டன. தங்க நாணயங்களும் அடிக்கப்பட்டன. பொருட் பண்டமாற்று நாணயமாய் மாறியது. ஒரு தங்கக் காசு கடந்த நூற்றாண்டில் 10 ரூபா விலை. எனவே ஒரு பவுணை - 10 ரூபாவை ஒரு பவுண் என அழைத்தனர். பத்துப் பவுண் என்றால் நூறு ரூபா. ஆக ஒரு துட்டு ஒன்றரை ரூபா. துட்டு என்றாற் காசு என்று பெயர். ஒரு துட்டுக்கும் வழி இல்லாதவள் எனப் பேசுவோம். எனவே காசு தங்கம் நகைஇ புடைவை போன்றவை மாறும்போது கொடுத்து வாங்கும் போது நாணயம் நாக்குத் தவறாமல் பரிமாற்றம் நடந்தது. ஒவ்வொருவரின் நாக்குதான் உத்தரவாதம். எல்லாவற்றுக்கும் நாக்குத்தான் நாணயம். இது நம்பிக்கையின் அடிப்படையில் பரிமாறப்பட்டது. நாக்கின் பெறுமானமே நாணயம் காசு, நகை போன்ற பொருட் கொடுக்கல் வாங்கலில் நாணயம் முக்கியம். அதியுயர்ந்த நடைமுறை. நாணயம் தப்பினால் அவ்வளவுதான் இவர் நம்பிக்கைக்கு உரியவரென்று இந்த நடைமுறை வாய்ச் சொல்லிலே தங்கியிருந்தது. ஆக நாணயம் காசைக் குறிப்பது கொடுக்கல் வாங்கலில் நாணயமாய் நடக்க உத்தரவாதம் அளித்தது. அடைவு, ஒற்றி, ஈடு என்பனவும் நாணயத்தை அடிப்படையாகக் கொண்டன. நறுக்கான பேச்சுத்தான் நாணயம். பண்டைய இந்நிலையே நாணயம். இது நம்பிக்கையைப் பொறுத்தது. குறிப்பிட்ட தவணையில் கொடுத்த கடனைத் திருப்பியளிப்பதே நாணயம். நாக்குஇ நறுக்கு என்றெல்லாம் இஃது அழைக்கப்பட்டது. குறிப்பிட்ட தினத்தில் மீளக் கொடுக்காவிட்டால் கடன் கொடுத்தவரின் வீடு சென்று இன்று தர முடியாமற் போனது நாளை தருவேன் எனச் சொல்வதும் அன்றைய நடைமுறையாகும். பிற்காலத்தில் புத்தகம், பட்டுத்துணி போல்வனவும் நாணயம் நம்பிக்கையிற் கொடுத்து வாங்கப்பட்டது. சிலர் வாங்கும்போதே திருப்பிக் கொடுப்பதில்லையென முடிவு செய்யும் புண்ணியவாளரும் உண்டு. இராவணனைக் கம்பர் கடன் கொண்டார் நெஞ்சம் போற் கலங்கினான் இலங்கை வேந்தன் எனப் பாடியுள்ளார். நறுக்கு, நிதானம், நம்பிக்கை இதன் அடித்தளம் நாணயம் என்பது கொடுக்கல் வாங்கலின் மெய்த்துவத்தை வெளிப்படுத்துகிறது. அரிச்சந்திரன் நாணயத்துக்காக தன்னையும் மனைவியையும் விற்றான். எனவே நாம் நாநயத்தோடும் நாணயத்தோடும் வாழ்வோமாக.●


## தமிழர் தகவல் இதழ்களைத் தபாலிலும் பெறலாம்

தமிழர் தகவல் மாத இதழ்களையும் பெப்ரவரி மாதத்தில் வெளிவரும் ஆண்டு மலரையும் தபாலில் பெற வசதிகள் செய்யப்பட்டுள்ளது. தபாற் கட்டணம் செலுத்தி இதனைப் பெற விரும்புபவர்கள் கீழுள்ள தொலைபேசி இலக்கத்தில் தங்கள் தொலைபேசி இலக்கத்தையும் பெயரையும் பதிவு செய்தால் தாமதமின்றித் தொடர்பு கொள்ளப்படும்.
அல்லது தஅமலைசனைநஒ½சயமபஅதஸைஒ.ஸஅ என்ற மின்னஞ்சலுக்கு விபரங்களை அனுப்பலாம்.

**416.920.9250**

• Loans • Mortgages • Insurance Claims • Traffic Tickets •

**JRB Universal Inc.**
Almost All Services Available

647 289 6164



**R.R. Rajkumar**
B.Com (Hons), M.B.A.

Scholarship Plan [RESP]
Any Referral Service

• Credit Counseling • Accounting & Tax Services •




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Diaspora Youth..

Tamil diaspora must mobilize to convince their host countries of the necessity of an internationally monitored referendum among the Eelam Tamils in the homeland, the refugees in India, and the Tamil diaspora to determine their political future.

Tamil organizations and activists must be held accountable to the democratic will of the people. There is a need for a greater transparency regarding the policy decisions taken by diaspora organizations. People have a right to hold organizations accountable to their mandate and also have a responsibility to exercise that right. Likewise, activists and organizations should have a mechanism in place for constructive criticism to be made and operating procedures that lay down how to incorporate feedback in activism and political engagement. There should be a change among the thinking of activists that their being a representative of the people is a service which comes with accountability, and not a charity for which they need be answerable to no one. The politics of namesake organizations and puppet outfits should be intellectually challenged by a democratic process. The formation of a robust Tamil civil society in the countries where the diaspora resides is necessary for this.

SIGNED BY

*Elackiya Rajasingam, Germany*
*Krisna Saravanamuttu, Canada*
*Luxcy Lambert, Germany*
*Sasithar Maheswaran, United Kingdom*
*Sathapalan Kanasalingam, United Kingdom*
*Seran Sribalan, Australia*
*Shanyuga Ganesan, United Kingdom*
*Sinega Puvaneswaran, Germany* ●


## பாலர் வகுப்பு மாணவர்களின் தேக்க நிலை!

ஒன்ராறியோ மாகாணத்திலுள்ள பாலர் வகுப்பு மாணவர்களில் சுமார் மூன்றிலொரு பங்கினர், மூன்றாம் தரத்தை அடையும் வேளையில் அதற்குரிய மாகாண தராதரத்தை அடைவதில்லையென்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எழுத்து, கணிதம், வாசிப்பு ஆகிய மூன்று பாடங்களிலும் மாகாண தராதரப் பரீட்சையை நிர்ணயிக்கும் மதிப்பீட்டை 'கல்வித் தராதர மற்றும் பொறுப்புக்கூறும் அலுவலகம் (Education Quality and Accountability Office - WQAO) எடைபோட்டு அறிவிக்கும். 1 முதல் 3 வரையான பாலர் வகுப்புகளிலுள்ள மாணவர்களில் 29 வீதமானவர்கள் மொழி மற்றும் புலனார்வம் ஆகியவற்றில் பின்தங்கியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அர்ச்சனாஸ் & கோ
அனைத்துவகை பூஜைப்பொருட்களின் களஞ்சியம்
பூஜைப்பொருட்கள், பூ, பூமாலைகள்,
மல்லிகைச்சரம், பரதநாட்டிய ஆடை ஆபரணங்கள்,
HD Video & Photography, Tamil Movies,
கர்நாடக CDs, DVDs, Passport & ID Photo
'உங்கள் இல்லந்தோறும் இறையருள் பெற'
416-292-0033 www.archanas.ca
2950 Kennedy Rd. Unit 10A Scarborough (One Block North of Finch)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1206-0585


# FREE ! Real Estate Classess




## Successful Real Estate Office With Over 300 Salespeoples




★No Franchise Fees ★No Monthly Fees ★No Desk Fees

## International Award Winning Office

## Top 5th HomeLife Office In Canada-2012

- 90:10 Commission Split.
- Over 300 Salespersons.
- Daily Training, Full Services Office
- 24 Hrs Access to the Office
- Office Open 7 Days/ Week

HOMELIFE HIGHER STANDARDS



**HOMELIFE /FUTURE REALTY INC.,** Brokerage
205 -7 Eastvale Dr., Markham, Ontario, L3S 4N7
Bus: 905.201.9977 | 416.264.0101

*Based on TREB data: 2010. (does not include independent or other franchisors). ©2010 HomeLife Realty Services Inc. All Rights Reserved.Each Office is Independently Owned and Operated. Not intended to solicit Agents or Brokers currently under contract.

*INDEPENDENTLY OWNED AND OPERATED*

**Selva Vettyvel**
*Broker of Record*
Tel:416-568-4301